SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

தோரோவின் எண்ணங்கள்
—சங்கு. மணி

மாஞ்செடியைப் பாருங்கள்
—ராஜாஜி

அன்பு முத்தம்
(கதை)—பெ. தூரன்

அதுதான் பணம்
—தி. ஜ. ர.

ஷோ! ஷோ!! ஷோ!!!

விஷமக் குரங்குகள்
—திப்பு

எத்தனை துயரமடி
—ராஜாத்தி

காணுமற் போன கச்சை
—குகப்ரியை

புத்தகம் 4. வைகாசி மீ 12உ (25-5-34) வெள்ளி இதழ் 26.

முடிவு

'இந்தக் கதை எப்படித்தான் முடிகிறதோ?' இது ஒரு கேள்வி. நடுப் பக்கங்களைப் படித்துக்கொண்டிருக்கும் போது இந்தக் கேள்வி தோன்றவே புத்தகத்தைப் புரட்டிக் கதா நாயகனைப் பற்றிய முடிவை அறிந்துகொள்வதில் அக்கரை காட்டுவது சிலருக்கு வழக்கம். கதாநாயகனுக்கு வெறுங் கல்யாணங்கூடப் போதாது—அவனுக்குப் பிள்ளைக் குட்டிகளும் பிறந்ததாகச் சொல்லப்பட்டால்தான் இந்த வாசக கோஷ்டிக்குத் திருப்தி. ஆசிரியன் கதையை எப்படி ஜோடித்திருக்கின்றானென்றோ, முடிவுக்கேற்பக் கதாபாத்திரங்களை கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்திக் கொண்டு போகின்றானா வென்றோ ஆராய்ச்சி செய்ய இந்த வாசக கோஷ்டிக்குப் பொறுமையும் இல்லை, திறமையும் இல்லையென்று சொல்லலாம். உலக வாழ்வின் சித்திரமே பெரும்பாலான கதைகள். உலக வாழ்வு ஒவ்வொருக்கும் இன்பகரமாகவே முடிகின்றதா?

கதையே யாயினும் கட்டுரையே யாயினும் 'ஆரம்ப'த்தை எப்படி ஆகர்ஷிக்கத் தகுந்த விதத்தில் அமைக்கின்றார்களோ அதேபோல 'முடிவை'யும் வாசகர் மனதில் பதியத் தக்கவாறு ஜோடிக்க வேண்டுமென்பது சிறந்த ஆசிரியர்களின் சம்பிரதாயம். வாசகர் மனதில் ஒரு உண்மையைப் பதியச் செய்வதற்கோ, ஒரு கருத்தை ஆழமாக நாட்டுவதற்கோ இன்பகரமான முடிவை விட 'வீழ்ச்சி முடிவு'கள்தான் அழுத்தமாகத் தைப்பவை என்பது உலகில் சிறந்த நாடகாசிரியர்களின் சித்திரங்களினின்று நாம் அறிகிறோம். இன்ப முடிவுடைய நாடகங்களின் புகழுக்கு அதிகமாகவே புகழ் சம்பாதித்துத் தந்த துன்ப முடிவுடைய நாடகங்களையும் சித்தரித்துச் சென்றார் ஷேக்ஸ்பியர். மனித மனதை இன்பத்தை விடத் துன்பந்தான் அதிகம் தைக்கும் வன்மையுடையது. "வாழும் குழந்தை ஓர் புறமிருக்க, இறந்த குழந்தைதான் தந்தை மனதில் என்றும் இளமையோடு உலவுகின்றது" என்று லீ ஹண்ட் எழுதி யிருக்கிறார். ஆகவே இன்ப முடிவுகளைவிட அதிக ஆகர்ஷண சக்தி துன்ப முடிவுகளுக்கு இருக்கின்றது என்பது உலக இலக்கியங்களை அறிந்தோரின் அபிப்பிராயமாகும்.

நமது நாட்டில் பண்டைய இலக்கியங்களிலும் காவியங்களிலும் பெரும்பாலானவை சுப முடிவோடுதான் வரையப்பட்டன; சுபமாகவே முடிக்க வேண்டும் என்று காவிய கர்த்தாக்களுக்குள் ஒரு மூடநம்பிக்கையும் இருந்து வந்ததாகச் சொல்வதும் மிகையன்று. கடைசியில் பாடும் மங்கள சுலோகத்துக்கு ஏற்ற விதத்திலேயே கதையின் முடிவும் இருக்கவேண்டுமென்பது பண்டையோர் கருத்து. கதையின் முடிவு வீழ்ச்சித் துறையில் போய்விட்டதானால் உடனே கடவுள் கதாநாயகனுக்குப் பிரசன்னமானாரென்றோ, கதாநாயகன் சுவர்க்கத்தையடைந்தானென்றோ ஒரு திடீர் முடிவைத் தயாரித்து விடுவது பழைய காவியகர்த்தாக்களின் வழக்கம். சிலப்பதிகாரத்தையும், சாரங்கதரன் சரிதையையும் வீழ்ச்சி முடிவுகளாகக் காட்டுவதற்குக்கூட அவர்கள் சகித்தார்களில்லை. இந்த 'இன்பமுடிவு'ச் சம்பிரதாயத்தை நவீன காலத்து நாவலாசிரியர்களும் பின்பற்றி பணங்குக் சணக்கில் புத்தகங்களை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கின்றனர். இவைகளின் பயனாக நம் நாட்டில் படிப்பவர்களின் உணர்ச்சி ஒரே கோட்டிலேயே ஓடிக் கொண்டிருக்கிறது. இன்பகரமான முடிவு இல்லாத புத்தகத்தைப் படிப்பதும் பாபம் என்று எண்ணுகின்றவர்களும் ஏற்பட்டிருக்கின்றனர்.

பண்டையக் கதைகளுள் சர்வ சகஜமான அரிச்சந்திரன் கதையை எடுத்துக்கொள்வோம். உண்மையை நிலை நாட்டுவதற்காகப் படாத பாடுபட்டுக் கடைசியில் அரிச்சந்திரன் சுடலையையும் காத்தான் என்ற கட்டம் வரை அவன் கதை வெகு அழகாகவே இருக்கின்றது. பிறகு இன்பகரமான ஓர் முடிவை ஏன் புகுத்த வேண்டுமோ தெரியவில்லை. 'உண்மைக்காகப் பாடுபட்டுக் கஷ்டப்பட்டு இறந்தான் அரிச்சந்திரன்' என்று கதை இருந்திருந்தால் அதனால் அரிச்சந்திரன் பெருமை துளி+கூடக் குறைந்து விடாது; இன்னும் அழகாகவே அவன் கதை இருக்கும் என்பது அறிஞர் அபிப்பிராயம். சிலுவையில் மாண்ட இயேசுவின் பெருமை நாளுக்கு நாள் வளரவில்லையா? ஆகவே முடிவு இப்படித்தானிருக்கவேண்டும் என்ற கோட்பாடும் சட்டமும் கதைகளுக்கிருக்கவே வேண்டாம்.

மனித வாழ்வு ஜகஜ்ஜாலக் கண்ணாடிக்கு (Kaleidoscope) நேரானது. அந்தக் கண்ணாடியை எப்படி வைத்துப் பார்த்தாலும் உள்ளே சம்பூர்ணமான ஓர் கோலம் தென்பட்டே தீரும். ஒரே விதமான கோலமே அக்கண்ணாடிக்குள் இருந்தால் அக்கண்ணாடிக்கு இவ்வளவு மதிப்புண்டா? அதேமாதிரிதான் இலக்கியத்திலும். மாட்சிமையோடு சில கதைகளுக்கு முடிவடையப் பாத்யதை உண்டானால் வீழ்ச்சியோடு முடிவதற்கும் கதைகளுக்கு பாத்யதை உண்டு. நல்ல சித்திரம் எப்போதும் நல்ல சித்திரம் தான். வரம்பு, சம்பிரதாயம், இலக்கணம் முதலிய விலங்குகளைக் கற்பனைக்கும் போடவேண்டுமா? வாழ்வில் இந்த விலங்குகளை அணிந்து கொண்டு ஆனந்திக்கின்றோமே அது போதாதா? மனிதனைப் பிணிப்பதை விட எழுத்தைப் பிணிப்பது அநியாயமன்றோ!

கதையின் முடிவு இன்பகரமாகவே இருக்கவேண்டும் என்ற சம்பிரதாயத்தை உடைத்தெறிய வேண்டும். வாழ்வு எப்போதும் சிரிப்பல்ல. அழுகையும் வாழ்வில் உண்டு. இரண்டும் உண்டு என்பதை அறிந்து கொள்பவன்தான் தீரனாகின்றான். வீழ்ச்சியிலும் கலங்காதவனையே வீரனெனப் போற்றுகின்றோம். ஆகவே வீழ்ச்சி முடிவுக் கதைகளும் மனித சமூகத்துக்குப் பயன் தருவனவே என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

வீழ்ச்சிக் கதைகளைச் சிருட்டிப்பது மேனாட்டுக்காரரின் காபிரைட் அல்ல. தமிழரும் சிருட்டிக்கலாம். வீழ்வுக் கதைகளை நன்றாக இரஸிப்பதற்கு வாசகர்களுக்கும் தெரியவேண்டும். வீழ்ச்சி முடிவுடைய நாலைந்து சிறந்த கதைகள் தமிழ் மொழியில் முளைத்து பிரபலமாகி விட்டதானால் பிறகு தமிழ் வாசகர்களைப்பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. அத்தகைய வீழ்ச்சிக் கதைகளை எழுதுவதில் யார் யார் முனையப் போகிறீர்கள்?

—சங்கு ஸுப்ரஹ்மண்யன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நே. 8088 ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] வைகாசிமீ 12உ வெள்ளிக்கிழமை (25—5—1934) [No. 26

திட்டம் போடு

"ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு" என்பது தமிழனுக்கு நன்றாய்த் தெரிந்த பழமொழிதான். எதுவாயிருந்தாலும் திட்டம் போட்டுத்தானாக வேண்டும். அதிலும் செல்வத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா? திட்டம் போட்டு வாழ்க்கை நடத்தாவிட்டால், குழப்பமும் சிரமமும்தான் எப்போதும் மிச்சமாயிருக்கும். ஏதோ கானகத்தில் அலைவது போல மனந் தோன்றியபடி நடந்து கொண்டிருந்தால் கால் சோர்ந்து போவதைத் தவிர வேறொரு லாபத்தையும் காண மாட்டோம்.

ஒரு சின்னஞ் சிறிய குடும்பத்தை எடுத்துக் கொள்ளுவோம். இன்னார் இன்னின்ன வேலைகளைச் செய்வது, செய்யத் தகுந்தவர், இவ்வளவு செய்வது என்ற வரன் முறைகள் வேண்டும். அந்த வரன் முறைகளை அனுசரித்து நடக்கவும் வேண்டும். இல்லாவிட்டால் குடும்பத்தில் அலங்கோலம் தான் மிஞ்சும்.

தேசம் ஒன்றை எடுத்துக் கொண்டாலும் திட்டம் போடாமல் காரியம் செய்யலாகாது என்று இப்பொழுது உலகத்திய பொருளாதார சாஸ்திரிகள் எல்லாரும் சொல்லுகிறார்கள். ஜனங்களுடைய தேவையை அனுசரித்தே பொருள்கள் உற்பத்தியாகும் என்று பழைய பொருளாதார சாஸ்திரிகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். முதலாளிகளின் லாப ஆசை ஒன்று மாத்திரந்தான் பொருள்கள் கண்மூடித்தனமாக உற்பத்தியாவதற்குக் காரணம் என்பதை இக்காலப் பொருளாதார சாஸ்திரிகள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

லட்சம் குடைகள் தேவையாயிருக்கும்போது பத்து லட்சம் குடைகள் உற்பத்தியாவது எப்படி யிருக்கும்? குடைகள், சந்திக்குச் சந்தி சிரிக்க ஆரம்பித்து விடுகின்றன; கட்டுக் கடையாகி விடுகின்றன. தொழிற்சாலைகள் ஒய்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் நேரிடுகிறது.

அதே சமயத்தில், இருபது லட்சம் அங்கிகள் தேவையா யிருக்கின்றன. ஆனால், அது தயாராவ தில்லை. ஏனென்றால், அதற்கு வேண்டிய அளவு தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைக்குத்தான் உற்பத்தியில் அராஜகம் என்று பொருளாதார சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அராஜக உற்பத்தியால்தான் உலகத்தில் இப்பொழுது பொருளாதார சம்பந்தமான சகல சங்கடங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

வருமானம், வரவு செலவு, என்னென்ன பொருள் எவ்வளவு தேவை, வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான பொருள் என்னென்ன, எவரும் சோம்பரில்லாமல் உழைப்பதற்கு என்னென்ன வேலைகளை எப்படி நிறைவேற்றலாம் என்ற விஷயங்களை யெல்லாம் கவனித்து நிர்ணயிப்பதுதான் பொருளாதாரத் திட்டமாகும். ஒரு பக்கத்தில் பட்டினி, மறுபக்கத்தில் அனாவசியத் தீனி; ஒரு புறம் சாமான் பஞ்சம், மறுபுறத்தில் வேலை யில்லாத் திண்டாட்டம் — இப்படி யெல்லாம் ஏன் இருக்க வேண்டும்? இதனால், அனாவசியமான கஷ்ட நஷ்டங்கள் விளைந்து ஒரு தேசத்தின் வாழ்வையே நிலை குலைத்து விடுகின்றன.

தனிக் குடும்பங்களின் அலங்கோல வாழ்க்கையை நிமிர்த்துவது அது அதைச் சேர்ந்தது. தேசத்தின் பொருளாதார நிலைமையை உயர்த்துவது எந்தத் தனி மனிதனாலும் முடியாது. அரசாங்கந்தான் அதை நிமிர்த்த முடியும். அரசாங்கந்தான் ஒரு தேசத்திற்குப் பொருளாதாரத் திட்டம் போடமுடியும்.

ருஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இதாலி, ஜப்பான் இப்படி ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த அரசாங்கங்கள் திட்டங்கள் கோலிச் செயல் புரிய ஆரம்பித்துவிட்டன. இந்திய அரசாங்கமோ பொருளாதார சம்பந்தமான புள்ளி விவரங்கள் தயாரிக்க, சமீபத்தில்தான் முயன்றிருக்கிறது.

புள்ளி விவரம் தயாரித்துவிடலாம்; ஆனால் சரியான திட்டம் போடவேண்டாமா? வேறு நாடுகள் வாழ்ந்து வயிறு வளர்ப்பதற்காகவே இந்தியா கடவுளால் படைக்கப் பட்டிருப்பது போல நினைத்து, புள்ளி விவரங்களைப் பயன் படுத்தினால் இந்தியா லாபமடையாது. இங்கிலாந்தையே தியானம் செய்து, அதன் விருப்பு வெறுப்புக்களின்படியே நடக்கும் ஒரு அரசாங்கம், சரியான திட்டம் போடுமா? நீட்டி முழக்கிக்கொண்டு காலத்தைக் கடத்திக்கொண் டிருக்கப் போகிறதா? யார் சொல்ல முடியும்?

தேசத்திற்குப் பொருளாதாரத் திட்டம் ஒன்று வேண்டும். சீக்கிரத்தில் இந்த அரசாங்கம் அதைத் தயாரிக்குமா, அது எவ்வளவு தூரம் தேசோத்தாரணத்துக்கு அனுகுணமா யிருக்கும் என்பவற்றைப் பார்ப்போம்.

நமது உலைக்கூடம்

இது என்ன நிலைமை?

இரண்டு கையையும் கொட்டினால் தான் சத்தமுண்டாகும். காங்கிரஸ் மாத்திரமோ, சர்க்கார் மாத்திரமோ தேசத்தில் சமரச நிலைமையை உண்டாக்கிவிட முடியாது. தற்பொழுது காங்கிரஸ் நிலைமையிலும் திட்டத்திலும் செயல் முறையிலும் பல மாறுதல் ஏற்பட்டுவிட்டது. பாட்னாவில் காங்கிரஸ் காரியக்கமிட்டி சில தீர்மானங்களைச் செய்திருக்கிறது.

1. காங்கிரஸ் சட்ட மறுப்பை நிறுத்திவிட்டது.
2. காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசம் செய்யத் தீர்மானம் செய்திருக்கிறது.
3. சட்டமறுப்பை நிறுத்திவிட்ட காங்கிரஸ், சட்ட வரம்புக் குட்பட்டு, சட்டசபைப் பிரவேசம் முதலியவற்றைப் புரிவதற்காக ஆங்காங்குள்ள காங்கிரஸ் சபைகளைப் புதுப்பித்தமைக்க முடிவு செய்திருக்கிறது.
4. காந்திஜீக்கு மாத்திரம், காங்கிரஸின் பெயராலேயே சட்டமறுப்புச் செய்ய உரிமை உண்டு.

காங்கிரஸின் இந்த நிலைமைகளைக் கவனிக்கும்போது முரணாகத் தோன்றும்; விசித்திரமாகக் காணப்படும். சர்க்கார் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறது, என்ன செய்ய வேண்டும் என்பதையும் கவனிப்பது அவசியமாகும்.

காங்கிரஸ் ஸ்தாபனங்களைச் சர்க்கார் ஏற்கனவே சட்ட விரோதமானவை என்று அறிக்கை செய்து, உருக்குலைத்துவிட்டது. அந்த அறிக்கைகளைச் சர்க்கார் இன்னும் ரத்துச் செய்யவில்லை. காங்கிரஸ் சதா சர்வதாச் சர்க்காரின் தயவிலேயே காரியம் செய்து கொண்டிருக்க முடியாது; சர்க்காரை அடியோடு அலட்சியம் செய்து மறந்துதான் செயல் புரிய முடியுமா? அந்த மகான் காந்தியின் நிலைமை வேறே இருக்கிறது. தனது ஆருயிர்த் தோழர்களையும், மாறு பேசாது தன் கட்டளைக்குக் கீழ்ப்பட்டவர்களையும், தேசத்தின் யாகாக்கினியில் ஆத்ம சமர்ப்பணம் செய்தவர்களையும் சிறையிலே வாடவிட்டு, தாம் மாத்திரம் சுக வாழ்வுக்குத் திரும்ப, அவர் விரும்பவில்லை. மனித உணர்ச்சி படைத்த எவர் தான் அவரது இந்த முடிவைத் தவறென்று சொல்லமுடியும்?

இது என்ன நிலைமை? இதற்கு மாற்று யார் கையிலிருக்கிறது? சர்க்கார் இப்போது உல்லாசமாக, ஒய்யாரமாய் 'பிடில்' வாசித்துக் கொண்டிருக்கக் கூடாது. அவநம்பிக்கையும், சந்தேகமும் நிறைந்த நிலைமை எதிரிக்குத்தான் பலவீனம் என்று சர்க்கார் நினைத்து அகமகிழ்ந்து கொண்டிருக்கக் கூடாது. நெருக்கடி வந்தால், இரு தரப்புக்கும் தான் சிரமமும் கவலையும். அடுத்தபடியாக, சர்க்கார் என்ன செய்யப் போகிறது? காலந் தாழ்த்தக் கூடாது. காங்கிரஸ் சபைகளின் தடையுத்தரவுகளை நீக்கி, சட்ட மறுப்புக் கைதிகள் யாவரையும் உடனே விடுதலை செய்தாலன்றி, நாட்டிலே ஒரு புதிய நிலைமை உண்டாகாது. அந்த நிலைமை உண்டாவது மாத்திரம் போதுமென்று நாம் சொல்லவில்லை. சர்க்கார் சமரச நோக்குடனும், புத்திசாலித்தனமாகவும் காரியம் செய்ய விரும்பினால், அந்த நிலைமையை உண்டாக்குவதுதான் அதன் முதற்கடமை. அவ்வளவுதான் நாம் சொல்வது.

தாயின் மணிக்கொடிக்காக—

தொண்ணூறும் சென்ற தொண்டுக் கிழவி, ஆனால் அவளைக் கிழவியென்று யாரும் கூற முடியாது; அவ்வளவு சுறுசுறுப்பு. எடுத்த காரியத்தைத் திறமையோடு செய்து முடிப்பாள்; பத்தும் பதினாறும் நிறையாத சிறு பெண்கூட, வேலை செய்வதில் அவளோடு போட்டி போட முடியாது.

அவள் ஒரு எளிய கையுறை (Gloves) தைப்பவனுக்கு வாழ்க்கைப்பட்டவள்; ஆனால் இப்போது விதவை. பல வகையான ஊர் விஷயங்களைப் பற்றி விவாதம் செய்வதில் அவளுக்கு மிகவும் பிரியம். அவள் தன்னைக் கிழவியாக நினைத்ததுமில்லை, அப்படிக் காட்டிக் கொள்வது மில்லை. தனது நரைத்த தலையைக் கரு மயிர் 'டோபா' போட்டு மூடி வைப்பாள். அவளுடைய வீடு அப்பு அழுக்கில்லாமல் பரிசுத்தமாய் இருக்கும். அவளுடைய பேர் சொன்னால் போதும்; அவ்வூரார் யாவரும் மகிழ்வர். அவளுடைய ஆடைகளை அவளே தைத்துக் கொள்வாள். எதெற்கெடுத்தாலும் இன்னொருவர் உதவியை நாடும் வழக்கம் அவளிடம் இல்லை.

அவளுடைய மூதாதையர்கள் ஜர்மனிக்காரர்கள். அமெரிக்காவில் குடியேறிய குடும்பங்களில் அவளது குடும்பம் மிகப் பழமையானது. அவள் பெயர் பார்ப்பாரா பிரட்சி. அவள் வசித்த ஊர் பிரடரிக்.

1861-ம் வருஷம் அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் (Civil War) நடந்தது. ஒரு நாள் எதிரிகளின் சேனை பிரட்சியின் சிற்றூரையும் தாக்கிற்று. அதுவரையில் வீட்டுக்கு ஒன்றாக ஆடிக்கொண்டிருந்த தேசீயக் கொடிகளெல்லாம் பஞ்சு பஞ்சாய்ப் பறந்து போய்விட்டன. ஆனால் பார்பாரா வீட்டுக் கொடி மட்டும் கீழே இறக்கப்படவில்லை.

சேனைத் தலைவனுக்கு அபாரமான கோபம். உடனே கொடியைக் குண்டு போட்டு அறுத்தெறியும்படி தன் சேனைக்கு உத்தரவிட்டான். கொடியும் அறுந்து விழுந்தது.

ஆனால் இல்லை. இடையிலே பார்பாராக் கிழவி அதைப் பிடித்துக் கொண்டாள். 'சுடுவதற்கு ஆசையானால் சுடுங்கள். என்னுடைய கிழத் தலையை நீங்கள் வெட்டி யெறிவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் உங்களது தேசீயக் கொடியை நீங்களே வெட்டலாமா?' என்று இடித்துரைத்தாளாம்.

சேனைத் தலைவனின் மனம் இரங்கிவிட்டது. அவன் அக்கிழவியை யாதொன்றும் செய்ய வேண்டாம் என்று உத்தரவிட்டானாம். அன்று முழுமையும் எதிர்க்க வந்த சேனைகளின் தலை மேலே பார்பாராவின் கொடி பறந்து கொண்டிருந்தது.

தன் தேசத்து மானத்தைக் காப்பாற்றுவதற்காக ஒரு கிழவி இவ்வளவு வீரம் காட்டுவாளாயின், நாமெல்லாம் எத்தகைய வீரர்களாய் இருக்க முயல வேண்டும்.

அந்தோ வைதிகமே!

நாகபுரியில் ஒரு உயர்ஜாதிப் பெண் கிணற்றில் விழுந்து விட்டாளாம். அவளை மேலே தூக்கிக் கொணர்ந்து பிழைப்பிப்பதற்காக இரு ஹரிஜன இளைஞர்கள் ஓடி வந்தனராம். அப்போது அங்கிருந்த சனாதன வைதிகர்கள் ஹரிஜனங்கள் தொட்டால், கிணறு தீட்டாய் விடும் என்று கூறி அவர்களைத் தடுத்து விட்டனராம். அப்பெண் இறந்து போனாள். 'எங்களுடைய பெண் இறந்தாலும் போகட்டும், உங்களுக்குக் கிணறு தொடும் உரிமைக்கு இடமிருக்கலாகாது. எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. உனக்கு இரண்டு கண்ணும் போனால் போதும்' என்று சொல்லும் கொடுமைதான் சனாதன தர்மமெனில் அப்பப்பா! அதை எந்த ஒரு நாகரிகமுள்ள மனிதன்தான் ஏற்றுக்கொள்ள முடியும்? அவர்களுக்கிருந்த வெறியில் 'ஆபத்துக்குப் பாபமில்லை' என்றுகூட நினைக்கவில்லை போலும்! பாவம் அந்தப் பெண் இவ்வைதிகர்களின் கொடுமையால் இறந்தாள். ஹரிஜன் வேண்டாம்; இவர்கள் தாங்களாகவேயாவது அவளைக் கரையேற்றிக் காப்பாற்றி யிருக்கலாமே. அதற்கும் தைர்யமில்லை. சீ! இத்தகைய உளுத்து ஓட்டையாய்ப் போயிருக்கும் பொய்ச் சனாதன தர்மத்தைக் காப்பாற்றத் தடிக் கம்பும், கல் வீச்சும் எத்தனை நாள் உதவி செய்ய முடியும்? அந்தோ, வைதிகமே! உன்னுடைய பைத்தியத்திற்கு ஓர் எல்லை யில்லையா?

அந்த ஜட்ஜ் யார்?

'ஒரு இந்திய ஜட்ஜ் ஒரு ஆங்கிலச் சீமாட்டிக்கு எழுதிய கடிதங்கள்' என்று ஒரு 'மொட்டை'ப் புஸ்தகம் இங்கிலாந்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதாம். அதில் ஒரு கவர்னரின் கொலை ரகஸ்யம் வெளியாகி யிருக்கிறதாம். அதன் பிரசுரகர்த்தா அக்கடிதங்கள் யாவும் நம்பத் தகுந்தவை என்று நிச்சயிக்கப்பட்ட பிறகுதான் புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டதென்று, உறுதி கூறி யிருப்பதோடு, சொல்லப்படும் கதை விவரம் பின்வருமாறு.

'இக்கடிதங்களின் ஆசிரியர் ஒரு இந்தியர்; இங்கிலாந்தில் பலநாள் வசித்தவர்; கேம்பிரிட்ஜ்ஜில் கல்வி பயின்றவர். பின்னால் இந்தியாவுக்கு அரசாங்க உத்யோகத்தை நாடித் திரும்பி வந்தார். கடைசியில் வட்டமேஜை மகா நாட்டிற்காக இவரும் போனார். அப்போது ஒரு பத்திரிகையின் விளம்பர நோட்டீஸைப் பார்த்தார். அதில் இந்திய கவர்னர் ஒருவரைக் கொலை செய்ததைப் பற்றி எழுதி யிருந்தது. ஒரு பத்திரிகையை வாங்கிப் பார்த்தார். ஆ! என்ன கோரம்! அந்த கவர்னரைக் கொன்றது இவருடைய சொந்த மூத்த மகன் அரவிந்தன். 'என்னுடைய முதல் மகனா—அரவிந்தனா இக்காரியம் செய்தவன்? இந்தியாவின் விடுதலைக்காக இவ்வாறு செய்ததாகக் கூறுகிறான். இப்போது தன்னைத் தானே சுட்டுக்கொல்ல முயன்றதால் ஆஸ்பத்திரியில் கிடப்பதாகத் தெரிகிறதே!' என்று நினைத்தாராம்.

பின்னர் உடனே தான் பம்பாய்க்குத் திரும்பி வந்து, வட இந்திய ஆஸ்பத்திரி ஒன்றில் தன் மகனைப் பார்த்த வரையில் ஜட்ஜ் வர்ணிக்கிறார். அங்கிருந்த தலைமைப் போலீஸ் ஆபீஸர் இவருடைய பழைய நண்பராம். அவர் இவரைக் கண்டதும் "இது உம்மால் தாங்கக்கூடாத கோரே சம்பவம். தங்கள் மகனுக்கு ஏற்படக் கூடிய பெரிய நன்மை—?" என்று மேலே கூற முடியாமல் தயங்கினாராம்.

'அவர் என்ன சொல்ல நினைத்தார் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய மகன் வியாதி சொஸ்தமாகாமல் இறந்து போவதே மேல் என்பதுதான்' என இவரே எழுதுகிறார்.

அந்த ஆஸ்பத்திரித் தலைவரும் இவரது நண்பர். ஆகவே அவர் இவருடைய மகன் பிழைத்துக்கொள்வான் என்று கூறி 'தூக்க மின்மையைப் போக்குவ'தற்காக எனச் சில குளிகைகளைக் கொடுத்து, அவைகளை இரண்டிற்குமேல் உபயோகித்தால் மரணமடைவிக்கும் என்று எச்சரித்தார். 'தனக்குத் தூக்கமின்மை யில்லாத போது டாக்டர் இம்மருந்தைக் கொடுக்கவேண்டிய அவசியமென்ன' என்று ஜட்ஜ் யோசிக்க ஆரம்பித்தார். பளிச்சென்று உண்மை வெளிப்பட்டது. அந்த நெருக்கடியில் தனக்கு டாக்டர் செய்யக்கூடிய உதவி தன் கையில் கொலை செய்யத்தக்க ஆயுதம் கொடுப்பதுதான் என்பது விளங்கியது.

அவ்வளவுதான்; இவருடைய மகன் அரவிந்தன் இவர் கொடுத்த விஷ குளிகையின் பயனாய் விண்ணுலகடைந்து விட்டானாம். மேற்படி ஜட்ஜியின் கதை இதுதான். அந்த ஜட்ஜ் யார்? அதுதான் தெரியவில்லை.

தராசு முனை

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது பழமொழி. எதை எதை எந்தெந்த அளவுக்குச் செய்ய வேண்டுமோ, அந்தந்த அளவில் செய்தால்தான் பயனுண்டு. இப்போது காங்கிரஸ் சட்டசபை நுழைவை ஆதரிப்பதனால், அதைத் தவிர நமக்கு வேறு வேலையில்லை என்று நினைப்பது தப்பு. காந்தியடிகள் கூறுவதைக் கேளுங்கள்.

"காங்கிரஸ் கமிட்டி முழுமையாகக் கவுன்சில் கட்சியாக மாறிவிடக் கூடாது. காங்கிரஸ்காரர்களின் எல்லா விதமான தேசீய வேலைகளையும் அமைத்து ஒழுங்குபடுத்தும் பிரதிநிதித்வ சபையாக அது விளங்கவேண்டும். 1920-ம் வருஷம் போட்ட மகத்தான திட்டங்களாகிய கதர், ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழித்தல், குடி யொழித்தல், தேசீயக் கல்வி, கிராமச் சீர்திருத்தம், கிராமக் கைத்தொழில்கள் முதலிய விஷயங்களில் அது கவனம் செலுத்த வேண்டும். சட்டசபை நுழைவை அதில் பிரியமுள்ளவர்களிடம் விட்டு விட வேண்டும். காங்கிரஸில் பெரும்பான்மையோரைக் கவுன்ஸில் வேலையின் படாடோபம் மயக்கிவிடாது என்று நினைக்கிறேன். கவுன்ஸில் வேலை அதனுடைய அளவில் பயன் தரக்கூடியதுதான். ஆனால் காங்கிரஸ் தன் கவனம் முழுவதையும் கவுன்சிலிடம் செலுத்தினால் அது தற்கொலைக்குச் சமானம்."

ஆகவே கவுன்சிலுக்குப் போகக் கூடிய சிறுபான்மையான காங்கிரஸ்வாதிகளைத் தவிர, மற்றவர்களுக்கு காந்திஜீ ஒரு மகத்தான சேவையைக் கொடுத்திருக்கிறார் என்பதை நினைவுறுத்த விரும்புகிறோம். எக்காரியத்திலும் தராசு முனைபோல் அளவை நிறுத்துப் பார்த்து அதற்கேற்ப வேலை செய்யவேண்டும்.

திருடரைப் பிடித்த தீர ரமணி

சென்ற மாதம் பீபி ஹார்னம் கார் என்னும் பதினறு வயது பால்யப் பெண்மணி பஞ்சாபில் மோஹோ தேசில் என்னும் கிராமத்தில் ஒரு கொள்ளைக் கூட்டத்தோடு சண்டையிட்டு அவர்களில் மூவரைக் கொன்று விட்டாள். அவளுக்கும், அவளது தகப்பனுக்கும் பலத்த காயங்கள். கார் இப்போது மேயோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறுள். அவளது வீரத்தை மெச்சி ஓர் கத்தியும், சரிகையிட்ட கதர் உறையும் பரிசளிக்கப் பட்டனவாம்.

அவளைப் பாராட்டி ஒரு ஆஸ்திரோலிய மாது ஓர் கடிதம் எழுதியுள்ளாள். அதில் சில பகுதிகளைக் கீழே தருகின்ருேம். அவள் தன்னைப் பற்றிக் கூறிக் கொள்கிறுள்:—

'நான் ஒரு ஆஸ்திரேலியப் பெண், சென்ற மார்ச்சு மாதத்தோடுதான் எனக்கு 16 வயது ஆரம்பிக்கிறது. நான் உயரமுமல்ல, சாதாரணமான பருமன், பழுப்புக் கூடிய நீல நிறக் கண்கள், தங்க நிறக் கூந்தல்.'

அவளுடைய வாழ்க்கை 'பள்ளிக் கூடம் போவதும், வருவதும், ஏதாவது கடையிலாவது வீட்டிலாவது வேலை செய்வதும்' தான்.

தன்னை இவ்வாறு இழித்துக் கூறிக் கொண்டு காரைப் புகழ்கிறுள்.

'ஆனல் நீயோ! எனக்கு என்ன சொல்லப் போகிறுய். உன்னுடைய வாழ்க்கை எனது உணர்ச்சிகளைப் பொங்க வைக்கும் உயர்வுடையதாயிருக்கக்கூடும்.'

'நம்மிடையே உலகமெல்லா வற்றிலும் பெரியதான வித்யாசங்களிருப்பினும் நாம் இருவரும் ஸ்நேகிதமாய் இருப்போம்.'

நம் நாட்டில் ஒரு சிறு பெண் செய்த வீரம் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால், கடல் தாண்டி, ஜாதி, பாஷை எல்லா வற்றையும் கடந்து ஒரு ஆஸ்திரேலியாச் சிறுமியின் மனதைக் கவர்ந்து விட்டதல்லவா?

நம் நாட்டிலே இத்தகைய வீர இளைஞர்களும், வீரச் சிறுமிகளும் ஆயிரக் கணக்கில் உற்பத்தியாக வேண்டும் என்பதே எமது ஆசை.

பள்ளிக் கணக்கு

இந்தியாவில் 1927-32-ல் கல்வி வளர்ச்சியைப் பற்றி கவர்மெண்டார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அவ்வறிக்கை நமது கல்வியைப் பற்றி வருந்தத்தக்க உண்மைகள் பல வற்றை எடுத்துக் காட்டியிருக்கிறது. நமது கலாசாலை மாணவர்கள் பெருவாரியாகப் பெருகிக்கொண்டு போவதும், அதில் பெரும்பான்மையோர் அப்படிப்பால் பயனென்னும் பெருது தவிப்பதும் வருந்தத்தக்க விஷயங்கள். இதன் காரணங்கள் பலபடியாகக் கூறப்பட்டுள்ளன. அவை ஒருபுறமிருக்க, இந்த இழிந்த நிலையை மாற்றி யமைக்கக் கூறப்படும் வழிகளுள் சிலவற்றை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

இவ்வறிக்கை நம் கல்வி முறையில் இருப்பதாகக் கூறும் முக்கியமான குறைகளில் கல்வி இன்ஸ்பெக்டர்கள் போதாதென்பது ஒன்று. இருக்கப்பட்ட கல்வியைப் பயனுடையதாகச் செய்யவேண்டியதை விட்டு, இப்பஞ்ச காலத்தில் ஏழை உபாத்யாயனின் சம்பளத்தில் ஒரு பங்கை, புது ஐ. இ. எஸ். (இந்தியக் கல்வி இலாகா) ஆபீஸர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு அர்த்தமே யில்லை.

மற்றும் சென்ற பத்து வருஷங்களில் 6 கோடியும், 7 கோடியுமாய்க் கல்விக்காக அதிகமாய்ச் செலவழிந்திருக்க, இந்த 5 வருஷத்தில் 250 லக்ஷம் கம்மியாய்ச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணம் பொருளாதாரக் குறைவு என்று மட்டும் கூறிவிட முடியாது. கவர்மெண்டார் இந்தியர்களின் கல்வியைப் பற்றி வேண்டிய அளவுக்குக் கவலைப்படுவதில்லை. இவ்விடத்தில் ஒன்று கூற விரும்புகிருேம். பொதுவுடமை என்றுலே நாம் தூர விலகிவிட வேண்டும் என்று சொல்லுகிருர்கள். ஆனல் இன்ஸால்வெண்டான போல்ஷ்விக்காரர்கள் 15 வருஷத்தில் கல்வியில் பெருவாரியாக முன்னேறி யுள்ளனர். ஆனல் இந்தியாவிலோ கட்டுப்பாடான கவர்மெண்டு இருந்தும் கல்வியில் மட்டும் அதிகமான முன்னேற்றம் ஏற்படக் காணேம்.

இவ்வறிக்கையில் ஒரே ஒரு விஷயம் நம் மனதைக் கவர்ந்தது. அதாவது மிக உயர்ந்த வகுப்பு வரைத் தாய்ப் பாஷையிலேயே எல்லா விஷயங்களும் போதிக்கப்பட வேண்டும் என்பதுதான். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் இப்போதுள்ள கல்வி முறையின் கஷ்டங்கள் பெரும்பாலும் தீர்ந்து போகும்.

கடைசியாக இவ்வறிக்கை கிராமாந்திரங்களில் வயது வந்தவர்களுக்குக் கல்வி போதிக்கவேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டுள்ளது. இக் குறிப்புக் கிரியாம்சையில் வரவேண்டும் என்பதுதான் நாம் விரும்புவது.

'வெள்ளியா, இங்கே போடு'

"தங்கமா? இங்கே தள்ளு. வெள்ளியா? இங்கே போடு. தகரமா? அனுப்பு இங்கே" என்கிறது அமெரிக்கா. எப்படியாவது தனது யுத்தக் கடன்களைத் தண்டினும் என்ற பெயர் வேண்டுமென்கிறது அமெரிக்கா. "தங்கம் வேண்டாமே; வெள்ளி, தகரம் எதையாவது வாங்கிக் கொள்ளலாமே" என்ற பலவித யோசனைகள் அமெரிக்காவில் கிளம்பி யிருக்கின்றன. தேசத்துக்குத் தேசம் கடன் கொடுக்கும் வகையும் சரி, அதைத் திருப்பி வாங்கும் தினிசும் சரி வெகு விநோதமாகும். உண்மையில் ஒன்றையும் கொடுக்காமலே கடனை ஏற்றிவிடப் பல மார்க்கங்களிருக்கின்றன. அதேமாதிரி ஒன்றையும் திரும்பப் பெருமலே கணக்குச் செய்துவிடும் வழிகளுமிருக்கின்றன. பாங்கி, கடன் பத்திரம், நாணயச் செலாவணி, நாணயமாற்று முதலிய ஜகஜ்ஜாலக் கருவிகள் இந்த அற்புதக் காரியங்களைச் செய்து விடுகின்றன. எப்படியாவது கடனை வாங்கியே தீரவேண்டுமென்று மாத்திரம் அமெரிக்கா கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. வெள்ளியை வாங்கலாமா, தகரத்தை வாங்குவோமா என்றெல்லாம் யோசிக்கிறது. நமக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அது யாருக்கும் எவ்வித சிரமமும் தாராது. வேலையில்லாதவர்களுக்கு வேலை கூடக் கிடைக்கும். அமெரிக்கா பாக்கி தேசங்களின் கடலிலிருந்து குடங்குடமாய் ஜலத்தை வாங்கிக்கொண்டு போய்த் தன் பசுபிக் சமுத்திரத்தில் கொட்டிக் கொள்ளுமானல், கடன் கணக்கையும் ஒருவாறு தீர்த்துவிடலாம்; உலகத்திற்கும் அதனல் எவ்வித சாதக பாதகமும் ஏற்படாது. செய்யுமா அமெரிக்கா?

எங்கள் பண்டிதர்

(ஸ்ரீவத்ஸன்)

எங்கள் பண்டிதர் ஒரு விநோத மான பிராணி, ஒண்ணரைக் கண்ணர், ஒட்டைப் பல்லர், உயர்ந்த நெற்றி, உருண்டை முகம், யுகக் கணக்கில் காவி யேறிய பஞ்சகச்சம், வண்ணன் கைபடாத கறுப்புக் கோட்டு, மடிப்பு மாறாத 'முண்டாசு டர்பன்', 'தில்லானா டப்பா' முதல் தலைச் சங்கத்துத் தனித் தமிழ் வரைத் தலைகீழ் நெட்டுரு, குரங்குகள் அத்திப் பழத்தை உதிர்ப்பதுபோல் வியாக்யானங்களை மணிக் கணக்கில் பொழிந்து தள்ளுவார், 'கிறு', 'கின்று', 'ஆ நின்று' எல்லாம் அவர் முன் கிறுகிறு என்று நடுங்கும், யாராவது தலையாட்டிப் பொம்மைகள் கிடைத்துவிட்டால் போதும், அவ்வளவுதான், அவருடைய பொறுமையை உண்டு இல்லை என்று செய்து விடுவார். அவர் ஒரு 'உபய வேதாந்தப் பிரதிவாதி பயங்கர'த்தின் திருக்குமாரர். ஆகவே எதிராளி அகப்பட்டால் 'பகுதி, விகுதி, சாரியை, சந்தி' என்றெல்லாம் தாறுமாறாகத் தமிழைக் கொலை செய்து குவித்து விடுவார். ஆங்கிலத்தில் நிரக்ஷர குட்சி. எது எப்படியிருந்தாலும் அவருடைய ஹாஸ்யம் இருக்கிறதே, அசல் சொக்கத் தங்கம்; விகடப் பத்திரிகைகளில் வரும் 'டிட்-பிட்ஸ்' திருட்டல்ல என்பதற்காகவே இவ்வளவு ஸ்பஷ்டமாய்க் கூறுகிறேன். எங்கள் பண்டிதர் ஹாஸ்யம் முழுவதும் 'ஒரிஜினல்'.

அவருடைய செய்கைகளே விசித்திரமானவை. தமிழ் வகுப்பில் வடக்கு மூலையில் எவனாவது பேசுவான்; தெற்கு மூலையில் ஒருவனுக்கு நிமிட்டாம் பழமோ, பிரப்பம் பழமோ நிச்சயம். அது அவருடைய தப்பிதமல்ல; அவரது கண் பார்வையின் தப்பு ஹெட் மாஸ்டர் வருவதாக எவனாவது கயிறு திரிப்பான்; உடனே பண்டிதர் அவசர, அவசரமாய்க் கழற்றி வைத்த தலைப்பாகையைத் தலை கிழாய் மாட்டிக்கொள்வார். அப்புறம் பசங்களது சிரிப்பிற்கென்ன பஞ்சமா? இன்னொரு விஷயம்; கிளாஸ் நடந்து கொண்டிருக்கும் போது தூங்கும்படியான நல்ல வழக்கம் எங்கள் பண்டிதரிடம் இல்லையென்று நினைக்கவேண்டாம்; பரிபூரணமாய் உண்டு.

அறப்பளீஸ்வர சதகமோ என்னமோ—சமயத்தில்தான் இவைகள் மறந்து போகின்றன. தொண்டையிலிருக்கு வெளியிலே வரலை. ஏதோ சதகம் என்பதுமட்டும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும்.—அதிலே பெற்றவன் ஒரு பிதா, வளர்த்தவன் ஒரு பிதா, கல்வி கற்பிக்கும் ஆசிரியன் ஒரு பிதா என்று ஒரு 'பிதா ஜாப்தா' தயாரிக்கப் பட்டுள்ளது. ஆகவே எங்கள் பண்டிதர் பிதா ஸ்தானத்திலிருந்து எங்களுக்கெல்லாம் செல்லப் பெயர்கள் வைத்ததைப் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள். என் பெயர் 'சுண்டைக்காய்ச் சுப்பு'. ஒரு அரை டஜன் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். 'சவடால் ஷண்முகம்', 'குண்டோதரக் குப்பன்', 'விளக்கெண்ணை விசுவ' 'குலாம்கீர் கோவிந்தன்', 'அன்னநடை அம்பி,' 'மூஞ்சூறு முத்தண்ணு'—இம்மாதிரியே. நிற்க, நாங்கள் பண்டிதருக்கு வைத்த செல்லப் பெயரையும் நீங்கள் கேட்க வேண்டாமா? அவருடைய பட்டம் பதவி முதலிய எல்லாவற்றையும் சொல்வதென்றால் இக்கட்டுரை போதாது. ஒரு 'டைட்டில்' மட்டும் 'ஸாம்பில்' காட்டுகிறேன். 'உபய வேதாந்த, பிரதிவாதி பயங்கர, பண்டித பூஷண, வித்வத் கோலாகல, அஷ்டாவதான, சதாவதான, சகஸ்ராவதான, சங்கீத சாஸ்திரப் பிரதிஷ்டித, சமஸ்த லோக திராவிட பாஷா பிரதிஸ்தாபித, பாஷாசார்ய, ஒட்டைப் பல், ஒண்ணரைக் கண், கரும்புள்ளி, செம்புள்ளி ஸ்ரீனிவாச ஆசாரியார்'. போதுமா?

அவர் பிறந்த ஊர் ஓர் பட்டிக்காடு, ரெண்டு டஜன் ஓலைக் குடிசைகளும், பண்ணையக்கார ஓட்டுவில்லை வீடு ஒன்றும், அரை டஜன் புளிய மரங்களும், ஒண்ணரை டஜன் பன்றிகளும், ஒரேயொரு உடைந்துபோன கிருஷ்ண விக்ரஹமும், கன்னிமார் கோயிலும் உடைய 'சள்ளிக்காடு'. இந்தச் சள்ளிக்காடு கூட நமது பண்டிதர் பிறந்த மகிமையால் புராணம் பெற்ற ஸ்தலமாக மாறிவிட்டது. அப்புராணம் பாடிய எங்களது பண்டிதருக்கே அதற்குள்ள ஆதாரத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. எதற்கும் அப்புராணத்தையும் சுருக்கமாய்ச் சொல்லி வைக்கிறேன். பரமசிவனும், பிரம்மனும் தாம்தாம் தெய்வமென்று மகா விஷ்ணுவோடு போட்டி போட்டனர். வாய்ப்போட்டி, கைப் போட்டியாகி, பின்னர் கத்திப் போட்டியாய் முடிந்தது. அப்போது கண்ணபிரானாகிய விஷ்ணு சொன்னார்: 'அடே! மூடர்களே! கத்தியினால் என்னைக் கொலை செய்துவிட முடியுமா? இதோ பாருங்கள்'' என்று தன் கழுத்தைத் தானே வெட்டிக்கொண்டு, தனக் கழிவில்லை என்பதைக் காட்ட, உடைந்த கழுத்தோடேயே பக்தர்களுக்கு நித்ய சாந்நித்தியமாயிருந்து காட்சி யளித்துக் கருணை புரிகிறார். இதுதான் புராணம். இவ்விடத்தில் ஒரு வார்த்தை. எங்கள் பண்டிதர் பரம வைஷ்ணவர், துளசிக்குப் பதில் திருத்துழாய்ப் பேர்வழி, ஏதோ பாடத்தில் வரும் தேவாரத்தையும், பெரிய புராணத்தையும் வேண்டா வெறுப்பாய்த் தலைவிதியே என்று சொல்லித் தொலைப்பார். அவருடைய நெற்றி நாமம் மூக்கு நுனி முதல் பிரம்மாந்திர ஸ்தானம் வரை வியாபித்திருக்கும். நிற்க.

எங்களைப்பற்றிச் சொல்ல வேண்டாமா? நாங்கள் ஹனுமார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், வாலொன்றுதான் பாக்கி. 'கொம்பேறி மூக்கன்' கோபுதான் எங்களது தலைவன். அவனை வானர சிரேஷ்டன் என்று கூறலாம். மரமேறுவான், தோட்டக்காரன் பார்த்துவிட்டால் மரத்துக்கு மரம் தாவுவான், 'மலைப் பிஞ்சு' எறிந்து மாம்பழம் திருடுவதில் அவனுக்கு இணையில்லை. ஹிஹிஹி என்று இளிப்பான். படிப்பில் மட்டும் பரம பூஜ்யம், வகுப்பில் அவன் வச்சாக்குடுமி சிரைச்சால் மொட்டை. அவ்வளவு பையன்

களும் அவனுக்கு அடக்கம். அதிலும் தமிழ்க்கிளாஸ் என்றால் எங்களுக்கு எப்போதுமே கிள்ளுக்கீரை. ஆனால் இந்தப் பண்டிதரிடம் எங்கள் ஜபம் சாய்வதில்லை.

எங்கள் பண்டிதர் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து இரண்டு மூன்று நாட்களாயின. நாங்களும் தமிழ்ப் பண்டிதர் தானே என்று எங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தோம்.

'டே! நேற்று எதுவரையில் பாடம் நடந்தது?' என்றார் பண்டிதர்.

'நடத்தின வரையில், சார்!' என்றான் மூக்கன்.

'அடுத்தவன்?'

'மணியடிக்கும் வரையில் சார்!'

'அதற்கு அடுதவன்! நேற்று எத்தோடு பாடம் முடிந்தது?'

'தங்கள் கொட்டாவியோடு சார்!

வாத்யாருக்கா கோபம் தாங்க முடியவில்லை. அப்படியா சங்கதி என்று ஒவ்வொருவனையும் நையப்புடைத்து 'இத்தோடு இன்று பாடம் முடிந்தது' என்று வெளியே போய்விட்டார். நாங்கள் மூன்றும் பேஸ்த்து ஆசாமிகள் போல் முழித்துக் கொண்டிருந்தோம்.

* * *

மற்றொரு நாள்.

பண்டிதர் கேட்டார்: 'அடே! அங்கே என்னடா பண்றே?'

பையன் — 'கேட்டுக்கிட்டேதான் சார்! இருக்கேன்.'

பண்டிதர்—'கேட்டுக் (Gate) கிட்டே இருப்பதற்கா பள்ளிக்கூடத்துக்கு வந்தே?' என்று ஒரு போடு போட்டார்.

* * *

ஒரு நாள் ஒரு நண்பர் அவரோடு பேசிக் கொண்டிருந்தார்.

நண்பர்—'ஸ்வாமிகளே! மணி பன்னியிரண்டாச்சு! சாப்பிட்டு வருகிறேன்' என்றார்.

பண்டிதர்—'ஏது! தாங்கள் தினம் பன்னி (யோசித்து) இரண்டு மணிக்குத்தானே சாப்பிடுவது. இன்று மட்டும் பன்னிரண்டு மணிக்கே அவசரமா?' என்றார்.

* * *

அன்று பள்ளிக்கூடத்துக்கு ஒரு புதுப் பையன் வந்தான்.

பண்டிதர்—உன் பெயரென்ன?

பையன்—மாரியப்பன்

பண்டிதர்—'கேப்' கொஞ்சம் கூடச் சேர்த்துக் கொள்வது தானே.

இத்யாதி எழுதிக் கொண்டே போகலாம். 'ஏதோ குப்பையைக் கிளறினால் மசுரு மசுராய் வரும்' என்பார்கள். எங்கள் பண்டிதரின் பேச்சுக் கூடையைக் கிளறினால் ஹாஸ்யம், ஹாஸ்யமாய் வரும். எனினும் இவரையும் ஏமாற்ற மூக்கன் ஒரு வழி கண்டு பிடித்தான். பாட்டு ஒப்பி என்று பண்டிதர் பெரும்பாலும் மூக்கனைத் தான் கேட்பார். மூக்கனும் தனக்கு முன்னுள்ள பையன் சட்டையின் பின்புறத்தில் குண்டூசியால் குத்தப்பட்டுள்ள பாட்டுத் தாளைப் பார்த்துக் கொண்டே பிழையில்லாமல் ஒப்பித்து விடுவான். மூக்கன் தமிழில் கெட்டிக்காரன் என்பது வாத்யாரின் எண்ணம்.

உண்மையில் இதில் யார் கெட்டிக்காரர். பண்டிதரா? நாங்களா?

தி யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதராஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி :—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—
இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.
இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.
இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.
மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.
பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.
பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்",
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

மரஞ்செடியைப் பாருங்கள்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

தாவர வருக்கத்துக்கும் மனித வருக்கத்துக்கும் உள்ள உறவு, குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள உறவு போன்றது. நாம் உபயோகித்தாகி விட்டதென்றோ கெட்டதென்றோ ஒதுக்கித் தள்ளுவதை யெல்லாம் மரங்கள் சுத்தப்படுத்தி, மிக இனிமையான பதார்த்தங்களாகச் செய்து, தாயைப் போலப் பரிவோடு நமக்கு மறுபடியும் கொடுக்கின்றன. ஆகையால், உலக வாழ்க்கையில் மரங்கள் எவ்வளவு முக்கியமான, அழகான காரியத்தைப் புரிகின்றது, பார்த்தீர்களா!

நாம் மூச்சு விடுவதற்கு, மூக்கு, வாய், சுவாசப்பைகள் ஆகியவை இருக்கின்றன. மரங்களுக்கு என்ன இருக்கின்றது? அவற்றிற்கு அழகிய பசிய இலைகள் இருக்கின்றன. இவைதான் அவற்றிற்கு மூக்கும் சுவாசப் பைகளுமாகும். எவ்வளவு அதிகமான காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் இழுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் இழுத்துக்கொள்ள வசதியாக அவற்றின் இலைகள் பரவி யிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரமாகச் சூரிய வெளிச்சத்தை அடைய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அடைவதற்காகத்தான், மரங்கள் உயர்ந்தோங்கி வளர்கின்றன. ஒரு மரத்தின்கீழ் ஒரு கொடியை நடுவீர்களானால், அது சூரிய வெளிச்சத்தை அடைவதற்காக, மரத்தைச் சுற்றிச் சுற்றிப் படர்ந்து உச்சிக்குப் போக முயலும். நீங்கள் ஒரு காட்டையாவது தோட்டத்தையாவது கவனித்துப் பாருங்கள்; துரதிர்ஷ்டவசமாக அங்கே நிழலில் முளைத்திருக்கும் மரங்கள், வளைந்து கோணி, எப்படியாவது சூரிய வெளிச்சத்தை அடைய முயன்று கொண்டிருப்பதைக் காண்பீர்கள். மரங்களின் முக்கிய உணவு சூரிய வெளிச்சந்தான்.

[மரஞ்செடியைப் பற்றியும் அவற்றினிட மிருந்தும் மனிதன் தெரிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. ராஜாஜீயின் பிரசங்கங்களடங்கிய Chats Behind Bars என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட விஷயம் யாவரும் ஊன்றிப் படிக்க வேண்டியதாகும்.]

அவற்றிற்கும் நம்மைப்போலவே நன்றாக உயிர் இருக்கிறது. ஆனால், நாம் இறந்ததும் நம் உடலங்கள் உபயோக மில்லாது போகின்றன. அவை அப்படி யல்ல. அவை மடிந்த பின்னரும் உபயோகமாகின்றன. மரத்தின் ஆரோக்கிய வாழ்க்கையை மனிதனுடைய வாழ்க்கையுடன் ஒத்திட்டுப் பாருங்கள். மனிதன் கண்டபடி திரிகிறான்; தீய பழக்கங்களையும் நோயையும் சம்பாதித்துக் கொள்கிறான்; அழுகிப்போன சாவு சாகிறான். மரங்களின் வாழ்க்கையோ ஒரே நிலைப்பட்டது. தவறான ஆகாரத்தை அவை உட்கொள்ளுவதில்லை. சுத்தமான, சரியான, ஒழுங்கோடு கூடிய வாழ்வை அவை வாழ்கின்றன. அவை மடிந்த பிறகும் அவற்றின் கட்டைகள் உபயோகமாகின்றன. சில மரக்கட்டைகள், இரும்பு முதலிய உலோகங்களைப் போல உதவுகின்றன. மனிதனைப் போலவே மரங்களுக்கும் நரம்புகள் இருக்கின்றன; உணர்ச்சியும் உண்டு.

மரங்களுக்குள்ளும் விவாகமுண்டு. தாவர உலகில் இருவகைப் புஷ்பங்கள் இருக்கின்றன. ஒன்று ஆண் பூ; மற்றது பெண் மலர் ஆண்பூவும் பெண்பூவும் சேராவிட்டால், காய் உண்டாகாது. வசந்த-காலத்தில், மரங்களில் மொட்டுக்கள் தோன்றுவதும், மலர்களின் புன்னகையும் சிரிப்பும் இனித்தமணமும் ஆகிய எல்லாம் நமக்காகவே என்று எண்ணுகிறீர்கள். இவை யெல்லாம் அவற்றின் மணவிழாவாகும்; குடும்ப மகிழ்ச்சியாகும்.

மலர்களிலுள்ள ஆண் அம்சமும் பெண் அம்சமும் கூடுவது எவ்வாறு? அது உங்களுக்குத் தெரியுமா? அது இன்னும் அதிக விசித்திரமானது. அழகிய சிறு பூச்சிகளும் ஈக்களும் தேனீக்களும் எறும்புகளும் இந்த சத்தை ஒரு பூவினின்றும் மற்றொரு பூவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து, அதன் மூலம் மரங்களைப் பலன் படச் செய்கின்றன. இச்சிறு பூச்சிகள் மலர்களின் விரோதிகளென்று எண்ணுகிறீர்கள். இப்பூச்சிகள் மலர்களின் மணங்களை முடிக்கும் புரோகிதர்களாகவிருக்கின்றன. மலர்களின் மணங்கள் நடக்க வேண்டியதற்காக, மலர்களிலுள்ள தேனைப் பருக இப்பூச்சிகள் அழைக்கப் படுகின்றன. அத்தேனையருந்த இவை செல்லும்பொழுது, ஆண் தாது, பூச்சிகளின் உடலில் ஒட்டிக்கொள்ளுகின்றது. இவ்வாறு பூச்சிகள் ஆண் தாதுவை மலருக்கு மலர் கொண்டு செல்லுகின்றன. தேனை நீங்கள் புரோகிதர் தட்சணை யென்றோ, சீதனம் என்றோ, வரதட்சிணை யென்றோ கூறலாம். இக்காலத்தில். வரதட்சணைக்காக, நமது பி. ஏ. பட்டதாரிகள் மணப் பெண்ணின் தந்தையை வற்புறுத்துகிறார்க ளல்லவா? ஆனால், ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். மலர்கள் கொடுக்கும் தட்சணை இனிமையான தேனாகும்; நாம் கொடுக்கும் தட்சணையோ கேவலம் காசாகும்.

ஒரு மரம் ஒரே ஜீவனன்று; உண்மையில் அது ஒரு பெரிய சமூகம் அல்லது தேசத்தைப் போல் இருக்கின்றது. அதில் ஏராளமான ஜீவன்களிருக்கின்றன. அவை யாவும் சேர்ந்து ஓர் அழகிய அவிபக்த குடும்பத்தைப் போல வாழ்க்கை நடத்துகின்றன. நாம் ஒரே குடும்பமாக வாழும் வகையை மறந்து, தனித்தனியாகப் பிரிந்து விட்டோம். தேகத்தில் கைகளோ கால்களோ மூளைக்குக் கீழ்ப் படியாமல், தத்தம் வேலையைச் சரிவரச் செய்யாவிட்டால், பாரிச நோய் பிடித்துவிட்டதென்று கூறுகிறோம். ஒரே ஒரு ஆங்கிலேயனுக்குத் தீங்கு நேரிடுமானால், ஆங்கில நாடு பூராவுமே தனக்குத் தீங்கு நேரிட்டது போல உணர்ச்சி கொள்ளுகின்றது. ஏனென்றால், ஆங்கிலேயர், ஒரே மரத்தைப் போல ஐக்கியமாக வாழ்கிறார்கள். ஆனால், நம்மில் யாருக்காவது தீங்கு ஏற்படுமானால், மற்றவர்கள் அவ்வளவு கூர்மையாக அனுதாபப் படுவதில்லை. அதனால்தான், நாம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம். நாம் இந்த ஒற்றுமையை மறுபடியும் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தில், ஒற்றுமையாக நாம் வாழவில்லையா? அந்த ஐக்கிய பாவத்தை விசாலப் படுத்திக் கொள்ள வேண்டும். தேசம் முழுவதும் ஒரே குடும்பமே யென்பதையும், நாம் யாவரும் ஒரே குடும்பத்தினரைப் போல வாழ வேண்டுமென்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்மிடமுள்ளதை நாம் தயங்காமல் தாராளமாகத் தேசத்திலுள்ள மற்றவருக்குக் கொடுக்க வேண்டும். இதுதான் தேசபக்தி யென்பதற்கு அர்த்தம். தேசத்தின் பொதுவான க்ஷேமத்தில் ஓர் தாயைப் போலவும் சகோதரனைப் போலவும் மகிழ்ச்சியடைதல் வேண்டும்.

தாயின் கருப்பைக்குள் குழந்தை எவ்வாறு போஷிக்கப் படுகின்றது தெரியுமா? குழந்தையின் தொப்பிள் கொடி யிருக்கின்றதல்லவா, அதன் மூலம் தாயின் இரத்தம் குழந்தைக்குத் தேவையான அளவு, அதற்குப் போய்ச் சேர்கிறது. நீங்கள் மலரைப் பார்த்திருக்கிறீர்கள். அதில் இதழ்களும் காம்பும் இருக்கின்றன. குழந்தை ஒரு புஷ்பம் அல்லது கனியைப் போல விருக்கின்றது. அதன் காம்பைப் போன்ற தொப்பிள் கொடியின் மூலமாக, குழந்தை தன் உணவைப் பெறுகின்றது. ஆகையால், தாயை ஒரு தருவாகவும், உள்ளிருக்கும் குழந்தையை உந்திக் கொடி யென்னும் காம்பால் இணைக்கப்பெற்ற ஒரு மிருதுவான கனியைப் போலவும் நீங்கள் கல்பனை செய்து கொள்ளலாம். கனி பறிக்கத் தகுந்த பக்குவமடைந்தவுடனே, காம்பு உலர்ந்து போகின்றது. அவ்வாறே, குழந்தை வெளியே வாழத் தக்க பக்குவ மெய்தியவுடனே, அது வெளியே வரத் தயாரா யிருக்கின்றது. இரண்டுக்கும் அதிக வேற்றுமையில்லை.

தேங்காயைப் பேன்ற ஒரு பெரிய காயை எடுத்துக் கொள்ளுங்கள். அது மிக உயரத்தில் இருக்கின்றது. அந்தக் காய் அவ்வளவு உயரத்திலிருந்தும் கீழே விழலாம். என்றாலும், அதற்குச் சேதம் உண்டாகாது. ஏனென்றால், அதற்கு அழுத்தமான மட்டை இருக்கிறது. தேங்காய் மட்டையில் இவ்வளவு நார் இருப்பதன் காரணம் இப்பொழுது உங்களுக்குப் புலப்பட்டிருக்கலாம். ஒரு தேங்காயைப் பார்த்தால், அதன் உந்திக் கொடி யாதென்று நீங்கள் சொல்லிவிட முடியும். தேங்காய் மரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் காம்பை நீங்கள் கவனியுங்கள். மரத்தினின்றும் தேங்காயைப் பிரித்தவுடனே தாய் வயிற்றிலிருந்து புறப்பட்ட குழந்தையைப்போல, அதற்கும் தனியான வாழ்வு உண்டாகி விடுகின்றது. தேங்காயை ஒரு முட்டைக்குச் சமமாகவும் நீங்கள் கருதலாம். அதில் ஜீவன், அதாவது சிறிய தென்னை மரம் இருக்கின்றது; அதன் உணவும் இருக்கின்றது. தேங்காய்க்கு உள்ளே யிருக்கும் சிறிய மரம் பெரிதாய், வளர்ந்து பூமிக்குள் வேர்விடும் வரையில், இளநீரும் வெண்மையான தேங்காயும் அதன் உணவுகளா யிருக்கின்றன. தேங்காயும் இளநீரும் நாம் தின்னவும் குடிக்கவும் படைக்கப்பட்டிருப்பதாக எண்ணவேண்டாம். மரத்தின் முளை, ஓட்டை யுடைத்து வெளி வந்து பூமியிலிருந்து தனது உணவைப் பெறச் சக்தி பெறும்வரையில், அதைப் போஷிப்பதற்காகவே தேங்காயும் இளநீரும் ஏற்பட்டிருக்கின்றன.

நெல்லின் விஷயமும் இதுவேதான். மேலே உமி இருக்கிறது. உமிக்குள்ளே யிருக்கிறது நெல்லின் குழந்தை. உமியிலிருக்கும் குழந்தை, பூமியில் வாழத் தெரிந்துகொள்ளும் வரையில் அதற்கு வேண்டிய உணவும் வைக்கப்பட்டிருக்கின்றது. மனிதன் சாப்பிடுவதற்காகவே அரிசி உண்டாயிருப்பதாக, நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால்; உமிக்குள் அடைபட்டிருக்கும் சின்னஞ் சிறு ஜீவனுக்காகத்தான் அரிசி உண்டாயிருக்கிறது.

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

கதரையே அணியுங்கள்



அன்பு முத்தம்

(பே. தூரன்)



சின்னப்பன் ஓர் ஏழைக் கிழவியின் ஒரே மகன். தாயும் பிள்ளையும் காட்டுப் பாளையத்தில் சிறிய குடிசை யொன்றில் வசித்து வந்தார்கள். சின்னப்பன் மூன்று ரூபாய்க்கு ஒரு பண்ணையத்திலிருந்தான். அதை வைத்துக்கொண்டு தான் அவர்கள் காலந்தள்ள வேண்டும். மற்றப்படி தாய்க்கு மகன் ஆஸ்தி; மகனுக்குத் தாய் ஆஸ்தி. தாய் தனது மகனை மிக்க அன்புடன் வளர்த்து வந்தாள். ஒரு வேளை கஞ்சி குடித்துங் குடியாமலும் அவள் தன் மகனைப் போஷிப்பாள். பையனுக்கு உடுக்க மாத்திரம் இரண்டு துண்டுகளுண்டு. அவன்மேல் அவன் வாழ்ந்த பதினாறு வருஷங்களில் ஒரு நாளும் ஆடைபட்டு அறியாது. ஆனால் தாயும் மகனும் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

சின்னப்பனுக்குப் பண்ணையக்காரன் மாடுகளை மேய்ப்பதுதான் வேலை. பகல் முழுதும் மாடுகளோடு திரிவான். அது அவனுக்கொரு விளையாட்டு. மாடுகளென்றால் அவனுக்கு அதிகப் பிரியம். அதிலும் ஓர் இளங்காளையை அவன் தன் சொத்தாகப் பாவித்துவந்தான். அது பருத்துப் பார்ப்போர் கண்ணைக் கவரும் கம்பீரமுள்ளதா யிருந்தது. அதற்குக் கூர்மையான இரு கொம்புகளுண்டு. அதனால் சின்னப்பன் அதை 'ஈட்டிக் கொம்பன்' என்று செல்லப் பெயரிட்டுக் கூப்பிடுவான். அதன் மேல் ஒரு ஈ நாந்தக் கூடாது. அது 'மா' என்று கத்தினால் தன்னைத்தான் கூப்பிடுகிறது என்று அவன் ஓடுவான்.

பொழுது விழவிழ, சின்னப்பன் தொழுவத்திற்கு மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து அடைத்துவிட்டு வீட்டிற்கு வருவான். இரவு அன்ன மருந்தியவுடன் அவன் தன் தாயோரோடு ஒரு கட்டிலில் வெளி வாசலிற் படுத்துக் கொள்வது வழக்கம். தாயார் கதை சொல்வாள். அதைக் கேட்டுக் கொண்டே சிறுவன் தூங்கிவிடுவான். தூக்கத்தில் "டே! ஈட்டிக்கொம்பா! கொணாரி போடரீங்களா?" என்பான். கிழவி புன் சிரிப்போடு அவனுக்கு ஒரு முத்தம் அளித்துவிட்டுத் தானும் உறங்கிவிடுவாள். நக்ஷத்திரங்கள்தான் அவர்களைக் காத்துக்கொண் டிருக்கும்.

மாதத்தின் பின் மாதமாய்க் கழிந்து கார்த்திகை பிறந்து முதல் வாரமும் சென்று விட்டது. காட்டுப் பாளையத்து மாரியம்மனுக்குப் பொங்கல். மாரியம்மன் பொங்கலென்றால் காட்டுப் பாளையத்திற்கு ஒரு பெரிய கொண்டாட்டம். புதிய மாப்பிள்ளைகள், பழைய மாப்பிள்ளைகள், பந்துக்கள் எல்லோரும் அங்கு இரண்டு நாள் முன்னதாகவே வந்து கூடி விடுவார்கள். பொங்கலன்று எங்கு பார்த்தாலும் புது வேஷ்டிகள், தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்த சிகப்புப் பட்டு வஸ்திரங்கள், பச்சை வஸ்திரங்கள், கெண்டை நார் மடிகள், மேகவர்ணப் புடவைகள், வான வில்லிலும் அதிக நிறவேறுபாடுகளுடைய சிற்றாடைகள், இவற்றைவிட நகைகள், எல்லாம் தலை மயங்கிக் கோயிலிலும், கடைகளிலும் மிளிரும். மாமன்மார்களும் அம்மாயிமார்களும் கொடுத்த 'தேர்க்காசு' கொண்டு சிறுவர்கள் வாங்கிய 'சீக்கி', புல்லாங்குழல் ஓசை ஊர் முழுதுங் கேட்கும்.

சின்னப்பனுக்கு அவன் தாயார் பொங்கலன்று இரண்டணாக் கொடுத்தாள். அவன் உடனே ஒரு நல்ல வெங்கல மணி ஒன்று வாங்கி 'ஈட்டிக் கொம்ப'னுக்குக் கட்டிவிட்டான். அவனுக்கு வந்த சந்தோஷத்திற் களவில்லை 'ஈட்டிக் கொம்ப'னைக் கட்டிக்கொண்டு ஒரு முத்தங் கொடுத்தான்.

மறுநாள் வழக்கம்போல் சின்னப்பன் மாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டுக்குச் சென்றான். புதிதாக மணி கட்டி யிருப்பதால் 'ஈட்டிக்கொம்பன்' மிரண்டு வாலைத் தூக்கிக்கொண்டு ஓடிற்று. ஓடவே மணிச் சத்தமும் அதிகரித்தது. அதனால் அது சின்னப்பன் கைக்குச் சிக்காமல் எங்கோயோ ஓடிவிட்டது சின்னப்பன் மிக்க வருத்த மடைந்தான். பகல் முழுதும் அங்குமிங்கும் ஓடினான்; காளையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருட்டானதும் காளை தொழுவத்திற்கு வந்துவிடுமென்று பார்த்தான். ஆனால் மறுநாளும் அது வரவில்லை.

பண்ணையக் காரனுக்குக் கோபம் வந்து விட்டது. "மாடுகளை விட்டு விட்டு உங்களுக்குத் தோக்கடையில் என்ன சோலி?" என்று இரண்டு அறை பளார் பளார் என்று சின்னப்பன் கன்னத்தில் அறைந்தான். "காளை வந்து சேராவிட்டால் ஊரைவிட்டுக் குடி யெழுப்பியாகி விடும் சாக்கிரதை."

சின்னப்பன் தேம்பிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். 'ஈட்டிக் கொம்ப'னைக் காணாத விசனம் ஒரு பக்கம்; தான் எவ்வளவு பணிவாக வேலைசெய்து வந்திருந்தும் பண்ணையக்காரன் அடித்தானே என்ற வருத்தம் மற்றொரு பக்கம். அப்பொழுது தான் அவனுக்கு 'என்ன இருந்தாலும் நான் ஒரு கூலிக்காரன் தானே, மூன்று ரூபாய்க்காக வேலை செய்பவன் தானே' என்ற எண்ணம் உண்டாயிற்று.

'ஈட்டிக்கொம்பன்' நல்ல காளையாவதற்கு நான் தானே காரணம். இப்பொழுது அது போய்விட்டதென்று எனக்கு அடி கிடைத்தது. காளை வந்து சேராவிட்டால் ஊரை விட்டே போய்விட வேண்டுமாம்' எனப் பலவாறு நினைத்துப் பெருமூச்சு விட்டான். அவன் கண்களிலிருந்து முத்துப் போன்ற நீர்த்துளிகள் சிந்தின.

இதற்குள் அவன் குடிசைக்குப் பக்கத்தில் வந்து விட்டான். கண்ணீரி

னிடையே அது மங்கிப் பன்மடங்கு கேவலமாகத் தோன்றியது. "அம்மாள் இதைக் கேட்டால் அழுவாளே, அவ ளிடம் எப்படிப் போவேன்?" என்று எண்ணி விம்மினன். அவன் மனதில் ஓர் உறுதி உண்டாயிற்று. காளையைத் தேடிப் பிடியாமல் வீட்டுக்குள் நுழைவ தில்லை" என்று அப்படியே திரும்பித் தன் கால் போன போக்கில் நடந்தான்.

மறுநாள் அந்தி வேளை. உலகம் சூரியனது பொற் கிரணங்களில் முழுகிக் கிடக்கின்றது. பக்ஷிகள் இனிமையாகக் கூவிக்கொண்டு வீசும் 'மெல்லிய பூங்காற்றில் மூழ்கி மூழ்கிக் களிக்கின்றன. பசும்புல்லை மேய்ந்த பசுக்கள் பால் சுரந்து வீங்கிய மடியைத் தாங்க மாட்டாது அசைந்தசைந்து தங்கள் கன்றுகளைத் தேடி வீடு நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. பின்னல் மாடு மேய்ப்பவர்கள் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டும், வயலில் வேலை செய்துவிட்டு வரும் கூலிக்காரர்கள் சலிப்புத் தோன்றும லிருப்பதற்காகக் கதை சொல்லிக்கொண்டும் வருகிறார் கள். சின்னப்பனது பண்ணையக்காரன் உலாவுவதற்காகப் புறப்பட்டவன் இயற்கையழகு மனதைக் கவரவே, தன்னையறியாது சுமார் நான்கு மைல் தூரம் ஊரை விட்டுச் சென்று விட் டான். அவன் மனதில் என்றுமில்லாத ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. அவன் ஆச்சரியத்தோடு சுற்றிலும் நோக்கி னன். ஒரு கிளி 'கிக்கி' என்று குதப்பி மரங்களின் இலையோடு இலையாய் மறைந் தது. கிளியின் குரலைப் பழிப்பது போல் ஒரு காக்கை 'கா கா' என்று கரைந்து ஒரு மலை மல்லிகை மரத்தின் கொம்பில் கர்வத்தோடு பறந்து சென்று உட்கார்ந்தது. அது உட்கார்ந்ததினல் அசைந்த கொம்புகள் வெண் மலர்களை உகுத்தன. இதைக் கவனித்த பண்ணை யக்காரனுக்கு ஒரு களிப்புண்டாயிற்று. அப்பொழுது அவன் மனம் மாசு நீங்கிப் பரிசுத்தமடைந்து அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்களுக்கு வீடாயிற்று.

இப்படி அவன் தன்னை மறந்து இயற்கையில் ஒன்றிச் சென்று கொண் டிருக்கையில் மணிச்சத்தம் அவன் காதில் விழுந்தது. அதனல் தன் உணர்வு வந்த பண்ணையக்காரன் திரும்பிப் பார்த்தான். ஒரு மரத்தில் தான் இழந்த காளை கட்டப்பட்டிருந் தது. கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணி சத்திக்கும்போது அது துள்ளிக் குதித்தது. சின்னப்பன் 'ஈட்டிக் கொம்ப'னைத் தன் இடுப்புத் துண்டில் ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டி விட்டுக் களைப்பால் ஒரு பக்கத்திற் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் அரையில் ஒரே கோவணமே யிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டதும் பண்ணையக்காரனுக்கு சின்னப்பன் 'ஈட்டிக்கொம்பன்' மேல் வைத்திருக் கும் ஆசையும், அதனல் அவனுக்கு விளைந்த துன்பமும் வெளியாகி விட் டன. ஆகையால் அவன் குறுக்கிப் படுத்துக் கொண்டிருக்கும் சின்னப் பனை அன்போடு உற்றுப்பார்த்தான். சின்னப்பன் கன்னத்தில் வழிந்த கண்ணீர்த் தாரைகளும், தான் அறைந்த அறையின் தடிப்புகளும் அப்படியே இருந்தன. அவன் இரண்டு நாட்க ளாகப் பட்டினி யாகையால் வயிறு முதுகோடு ஒட்டி யிருந்தது. பண்ணைய க்காரனுக்கு இதைக் கண்டதும் இரக் கம் பொங்கி விட்டது. 'இவனையும் அடித்தோமே' என்ற எண்ணம் அவன் கண்களில் நீரைப் பெருக்கிற்று. அப்பொழுது அவனுக்குப் பண்ணயக் காரன், வேலைக்காரன் என்றே பிரிவே மனதில் உண்டாகவில்லை. சின்னப்பனி டம் என்றுமில்லாத-என் பண்ணையக் காரர்களுக்கே இல்லாத-அன்பு வளரப் பண்ணையக்காரன் அவனை வாரி யெடுத்து அவன் கண்ணீர் வடிந்த கன்னங்களில் அன்பு முத்தம் ஈந்தான்.

ஷோ! ஷோ! ஷோ!

தென்னட்டிலுள்ள எந்தப் பட்ட ணத்துக்குப் போனலும் வண்டிகளில் டமாரம் கிடு கிடுக்கிறது. மைதானங் களில் எலெக்டிரிக் விளக்குகள் மினுக்கி யழைக்கின்றன. ஷோ! ஷோ! ஆப்பிரிக்கன் ஷோ! கல்கத்தா ஷோ! இங்குள்ள காட்சி சாலையை (ஷோவை) நடத்துகின்ற எஜமானர்களுக்கு கல்கத் தாவும் ஆப்பிரிக்காவும் இருக்கும் திக் குக்கூடத் தெரியாதிருக்கலாம். ஆனல் பெயர் எதற்காக வைக்கப் படுகிறது. பாமரரை வசியம் செய்வதற்காகத்தான் அல்லவா? இப்படி கம்பீரமான பெய ரையும், விளக்குகள் ஜொலிக்கும் அழகையும் உடைய இந்த 'ஷோ' காட்சிகளில் எல்லாம் என்ன தான் இருக்கின்றன வென்று விவரிக்க வேண்டுமா?

சில நாட்டிய மாதுகள் குதிக்கிறார் கள். மாஜிக் செய்பவர் சிலருண்டு. குஸ்தி போடுவதாக அபிநயிக்கும் புல் லுத்தடுக்கிப் பயில்வான்கள் சிலருண்டு. இவைகளை யெல்லாமாவது மனித சாமார்த்தியத்தைச் சேர்ந்தவை யென்று தூக்கி வைத்துப் பேசலாம். ஆனல் சைத்தான் சாமர்த்தியத்தின் விஷமங்களான, வளையம் போடுதல், துப்பாக்கி சுடுதல், வை ராஜா வைப் பந்தயம் ஓடும் குதிரைப் பொம்மைகள் இப்படி பல மேற்படி ஷோக் களில் இருக்கின்றனவே அவை களை என்னென்பது. ஊரை மயக்கு வதற்காக ஒரு ஜப்பான்காரனையோ, ஒரு ஆங்கிலோ இந்தியனையோ வேலைக்கு வைத்துக் கொண்டு அங்கு மிங்கும் உலாவி ஊரை மயக்குவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

'லக்கி டிப்' என்று ஒரு தனிக் கடை மேற்படி 'ஷோ'க்களில் இருக்கின் றன. ஒரு அணு தந்து எந்தப் பொட்ட ணத்தை வேண்டுமானலும் பொறுக்கி யெடுத்துக் கொள்ளலாமாம். பொட் டணத்தின் மேலேயுள்ள காகிதச் சுற்றலை உரிந்து விட்டு உள்ளே பார்த் தால் காலணு பெறுமானமுடைய ஒரு சீப்போ, இரண்டு பை, பெறுமான முடைய ஒரு நூல் கண்டோ ஒரு பைக்கும் கொஞ்சம் குறைவான விலை யுடைய ஒரு ஊதலோ தான் இருக்க காண்போம். அரையணு விலையுள்ள சாமான் லக்கி டிப்பில் கிடைத்து விட் டால் அவனுக்கு அதிருஷ்டம் பிரமாத மாக இருப்பதாகப் பேசிக் கொள்கிறார் கள். ஆனல் உண்மையில் அதிருஷ்ட சாலி யார் தான் தெரியுமா! ஷோவை நடத்துகின்றானே அவன் தான் பரம அதிருஷ்டசாலி. அதிருஷ்டசாலி மட்டுமன்று; மனிதனின் கேவல மனேபாவங்களை வெகு நன்றாக அறிந்த மனேதத்துவ சாஸ்திரி என் றும் அவனைக் கருதலாம்.

தேசத்தில் தரித்ரீம் ஜாஸ்தியாக எல்லாத் தொழிலும் படுத்துக் கொண்டே வருகின்றன. ஆனல்

பந்தயப்பண சம்பந்தமான தொழில்கள் மட்டும் ஏறு சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கின்றன. உத்யோகங்கள் கிடைப்பது எங்கும் துர்லபமாயிருக்கின்றது. 'வேலை'யில்லாததால் கூலிப் பணமுமில்லை. ஆனால் கை வருந்தி வேலையில்லாமல் பணம் மட்டும் கிடைக்கும் முறை ஏதாவது தென்பட்டால் அது எந்த ஏழையைத் தான் வசீகரிக்காது. இந்த மனோபாவத்தின் தேவையைப் பூர்த்தி செய்வன 'ஷோ' கொட்டகைகளேயாம். 'ஒரு அணா போட்டால் ஒரு ரூபா வருகிறதாம்' என்று பேசிப் பேசிப் பிரசாரம் செய்கின்ற கோஷ்டி ஒன்றுண்டு. பிறரிடம் பிரமாதமாய்ப் பேசி அவர்களைப் பணமிழக்கச் செய்வதில் ஒரு திருப்தி சில மனித ஜந்துக்களுக்கு உண்டு. இந்த இச்சா சேவகத் தொண்டர்களை நம்பியே பந்தய நிலையங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பட்டணமும் பிரதி தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழந்து வருகிறது.

நாலு பேராக உட்கார்ந்து 'ரங்கு' ஆடுவதைப் போலீஸ் இலாகா குற்றமென்று சொல்கிறது வாஸ்தவம். ஆனால் ஆயிரக்கணக்கான பேர் மத்தியில் இத்தனை வெளிச்சம் போட்டு மோசடியும் சூதும் நடைபெறுகின்றனவே, இதற்கு எப்படிப் போலீஸ் லைசென்ஸ் கொடுக்கலாம்?

வறுமையில் கஷ்டப்படும் ஜனங்கள் மூளையையிழந்து தற்கொலைக்குச் சமானமான காரியங்களைச் செய்து விடுவது சகஜம். ஆனால் சமூகத் தலைவர்களும் அரசாங்கமும் அவ்வாறு ஜனங்கள் தலை தடுமாறுவதையும், முதலாளி வர்க்கம் ஏழைகளின் பணத்தைப் பறிப்பதையும் அநுமதிக்கலாகாது. இந்த 'ஷோ'க்கள் நடைபெறாத வண்ணம் தடுப்பதற்கு ஆங்காங்குள்ள முனிஸிபாலிட்டிகள் ஏதாவது ஒருவழி கண்டு பிடித்தால், ஏழைகளுக்கு மறைமுகமான உதவி செய்தது போலாகும். போலீஸ் இலாகா இந்த ஷோக்களுக்கு ஓயாமல் லைசென்ஸ்கள் தந்து கொண்டிருப்பதை நிறுத்தாதா?

மகாத்மா காந்தி எழுதிய

ஆரோக்கிய வழி

விலை அணா 4.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

அதுதான் பணம்

(தி. ஜ. ர.)

உழைப்புக்கு அபார மதிப்பு உண்டு. அது என்னவோ, உண்டோ இல்லையோ; பெரியவர்கள் எல்லாரும் அப்படி எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள்; இன்னும் எழுதிக்கொண்டுமிருக்கிறார்கள். உழைப்பு, உழைப்பு, உழைப்பு! சலியா உழைப்பு! அதை நினைக்கும் பொழுது, பேசும்பொழுது, பத்திரிகை புத்தகங்களில் படிக்கும் பொழுதெல்லாம் ஆனந்தமாய்த்தான் இருக்கிறது. ஆற்றும் பொழுது அதாவது உழைக்கும்போது எப்படி? உழைக்கும்போது சந்தோஷம் ஒன்றுதான் உண்டு என்று யாராவது சொல்லமுடியுமா? சந்தோஷம் உண்டு; துக்கமும் உண்டு. உற்சாகமுண்டு; சோம்பலும் தளர்ச்சியும் கூட உண்டு. நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது.

* * *

வானத்தைப் பாருங்கள்; அண்டங்கள் இயங்குகின்றன. ஆழ்கடல்; என்ன ஓசை; என்ன ஓயாத அலை! குஞ்சு குருவி, ஈ எறும்பு உள்பட எண்பத்தெண்ணாயிரம்—இந்தக் கணக்குக்கு இந்தக் கட்டுரை ஜவாப்தாரியல்ல—எண்பத்தெண்ணாயிரம்ஜீவராசிகளேயும், பாருங்கள். 'சோம்பல்' என்ற பாஷை மனிதனைத் தவிர, வேறெந்த ஜந்துவுக்காவது உபயோகப்படுமோ? உழைப்பின் பெருமையே பெருமை! மனிதனைத் தவிர மற்ற ஜந்துக்களெல்லாம் பூரண உழைப்பில் ஈடுபடுவதாலா அந்தப் பெருமை? இல்லை, அப்படிச் சொல்லவில்லை. அது கிடக்கட்டும். இப்படிக் கவிதை நடையில் பேசித்தான் உழைப்புப் பெருமை உடையதென்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதில்லை. உண்மையிலேயே அதற்குப் பெருமை உண்டுதான்.

* * *

பெருமை கிடக்கிறது. கெட்ட காரியங்களைச் செய்யாதிருப்பது மனிதனுக்குப் பெருமை. அதர்ம வழியில் செல்லுவது சிறுமைதான். பெருமைக்கு ஒவ்வொரு தனி மனிதனது உள்ளத்தையும் கொண்டு செலுத்தும் தனி வலிமை இருக்குமானால், உலகத்தில் சட்டங்கள் எதற்கு?" "பெருமை" என்ற சொல் மந்திரமாயிருக்கலாம். மனிதனது ஆசையும் ஏக்கமும் அந்த மந்திரத்துக்குக் கட்டுப்படாத பிசாசுகள் என்பதையும் நாம் நினைவு கூர்தல் வேண்டும். உழைப்பு, படைப்பின் சட்டம்; உயிர் வாழ்க்கையின் நியமம், நிபந்தனை. அதனால்தான் அதற்குப் பெருமையுங்கூட.

* * *

உழைப்பின் பெருமை அவனுக்குத் தெரியாது. யாருக்கு? ஒருவனுக்கு—அவனுக்கு—என்பது உபசாரம். யாரோ, குப்பன், மாணிக்கம், செல்லன்; எவனோ ஒருத்தன். ஓலைக் குடிசை, ஒரு சிறிய 'பொந்து,'—இதற்கு அவன் வீடு என்று பெயர். அவன் எங்குமிருக்கிறான். இமயம் முதல் குமரி வரையில் அவன்—அல்லது அவன் தினிசு—ஆள்கள் உண்டு. சகதி குழம்பும் வயல், அதிர்ந்து நடுங்கும் தொழிற்சாலை, இயக்கம் நிறைந்த வீதி—பகலெல்லாம் இந்த இடங்களே அவனுக்குக் கதி. வேலை நினைப்போடுதான் அவனுக்குப் பொழுதுவிடியும். உழைப்பும், மழை, வெயில், காற்று, வியர்வை, ஆவேசம் ஆகியவையும் பின்னி முறுக்கிக்கொண்ட ஒரு வஸ்துவே அவனுக்குப் பகற்போது.

* * *

உழைப்பின் பெருமையைப் பற்றிச் சவிஸ்தாரமாய்ச் சொல்லும் சாத்திரங்களை அந்தக் குப்பன், மாணிக்கம், செல்லன் அல்லது அந்த ஒருத்தன் படித்ததே கிடையாது; யோசித்ததும் கிடையாதுதான். உழைப்புக்குப் பெருமை யுண்டு; விளைவுண்டு. உழைப்பிலே, மகிழ்ச்சி, ஒரு சாந்தி இருக்கிறது. இப்படியெல்லாம் சொல்லுகிறார்களே; இவையெல்லாம் அவனுக்குத் தெளியத் தெரியாது. கர்ண பரம்பரையாக வந்துள்ள அரைகுறைப் பழமொழிகள் அவனுக்குப் பரிச்சயமானவை என்பது உண்மைதான். ஓய்ந்து கிடக்கும் கால் பந்துக்கு உதை

கொடுக்கிறார்கள் அல்லவா? இந்த மாதிரி தான் அந்தப் பழமொழிகள் அந்தக் குப்பனுக்கு உபயோகம். மருந்தை விழுங்கக்கூட முடியாத தேகத்தில் ஊசி குத்தி ஏற்றுவதைப் போல, தளர்ச்சியில் தன்னை யறியாமல் வேகம் பெறுவதற்கு உட்கொள்ளும் மயக்க மருந்தைப்போலத்தான் அவன் அந்தப் பழமொழிகளைக் கையாள்வதும். சட்டத்துக்கும் வக்கீலுக்கும் உள்ள உறவு, சட்டத்துக்கும் சாமான்ய மனிதனுக்கும் கிடையாது. ஆனால் சட்டத்தின் அதிகாரம் சாமான்ய மனிதனிடம்தான் அதிகமாய்ச் செலாவணியாகின்றது. படைப்பின் சட்டம் அந்தக் குப்பனுக்குத் தெரியாது. சட்டம் தெரிந்தவனுக்குத்தான் சட்டத்தை ஏமாற்றுவது சுலபமாயிருக்கும். படைப்பின் சட்டத்தைக் குப்பன் எப்படி ஏமாற்றமுடியும்?

* * *

"குப்பா, கொஞ்சம் இளைப்பாறேன்."

"நமக்கு அதெல்லாம் கட்டுமா, சாமீ. வேலை செய்தால் கூலி. இரண்டு காசு கிடைத்தால்தானே வயிற்றைக் கழுவலாம்."

"அதோ பார், குப்பா. அந்தக் கோபுரம், இந்த மாளிகை, குளம், வாய்க்கால், நெல், நூல் எல்லாம் யார் உண்டாக்கினார்கள் தெரியுமா?"

"அந்த வம்பெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் நமக்கு வயிறு நிரம்புமா?"

இதே தோரணையில் செல்லுகிறது குப்பனின் பேச்சு.

* * *

"வேலை செய்தால் தான் கூலி" என்பது அவன் ஆயுள் முழுவதும் திரும்பத் திரும்ப உருப்போடும் பழமொழி தான். அடுத்த தெருவில் ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. அங்கே ஒரு ஐயாவும் இருக்கிறார். பிறந்தது முதல் அவர் வேலை செய்ததே யில்லை. "கவி, சித்திரம், சிற்பம், பாட்டு, நடனம்" இவைகளைப் பற்றியே அவர் அனவரதமும், போனவர் வந்தவரிடமெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார். "நாகரிகம்" என்ற சொல்லுக்குள் இவை யெல்லாம் அடங்கி விடுகின்றனவாம். பஞ்சபட்ச பரமான்னத்தோடு தான் சாப்பாடு. ('பஞ்சபட்ச பரமான்னம்' என்று அவரிடம் சொல்ல வேண்டாம். இந்த அநாகரிக வார்த்தைகளால் அவருடைய புதிய உண்டி வகைகளைக் குறிப்பிட்டால், அவருக்குக் கோபம் வந்தாலும் வரலாம். இது நமது பரிபாஷை. அவ்வளவு தான்.) அவருக்கு எப்படிக் கூலி கிடைக்கிறது? அவர் வயிறு எவ்வாறு நிரம்புகிறது? இதைக் கேட்டால், குப்பன் வெகு சுவாரஸ்யமாய்ப் பதில் சொல்லி விடுகிறான்.

"அது தான் பணம், சுவாமீ. அவருடைய அப்பன் பாட்டன் தேடி வைத்த பணம் இருக்கிறது. அவர் அதிட்டக்காரர், ஐயா."

* * *

"அதுதான் பணம்" என்பது குப்பனுக்குச் சமாதானம். படைப்பின் சட்டத்துக்குச் சமாதானம் அல்ல; பணத்துக்கும் சமாதானமல்ல. ஏனெனில், பணத்துக்கு வாயும் மதியும் இருந்தால், இந்தச் சமாதானத்தைக் கேட்டு அது சீறி விழுந்திருக்கும். உழைப்பின் சக்களத்தியா பணம்? உழைப்பு என்ற சட்டத்துக்கு, அஸெம்பிளியில் வரும் திருத்தங்கள் போல, உலகத்துக்கு வந்த ஒரு திருத்தமா பணம்? உழைப்பை உலகினின்றும் ஓட்டுவதற்கு வந்த கொள்ளை நோயா பணம் என்பது? பணத்தின் சரித்திரம் மனிதனின் சரித்திரம் என்பதை மறந்து பேசுவது அறியாமையாகும். குப்பனுக்கு அது தெரியாது. எதற்காகத் தெரியவேண்டும்?

கண்ணிருந்தும் குருடர்

பம்பாய் ஆலைத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தைப் பற்றி காமன்ஸ் சபையில் ஓர் விவாதம் நடந்தது. அப்போது க்ரென்பெல் என்பவர் 'முன்னமேயே மிகக் குறைவாயிருந்த சம்பளத்தைப் பின்னும் குறைக்க முயன்றதால்தான் வேலை நிறுத்தம் ஏற்பட்டதென்று குறிப்பிட்டாராம். அதற்கு சாமுவேல் ஹோர் 'வேலை நிறுத்தத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன' எனப் பதில் விடுத்தாராம். இவ்விளக்கெண்ணை மழுப்பலின் அர்த்தம் என்ன? சம்பளக் குறைவு என்பது சரியல்ல என்பதா? அல்லது சம்பளக் குறைவு மட்டும் காரணமல்ல என்பதா? இதன் பொருள் யாது? நிற்க,

ஒரு பக்கம் பணக்கார முதலாளிகள், எவ்வளவு நாள் வேண்டுமாயினும் தாக்குப் பிடிக்கக்கூடியவர்கள், அவர்கள் எந்த நொண்டிச் சாக்கும் சொல்லுவதற்குத் தயாராயிருக்கின்றனர். மறு பக்கம் ஏழைகள், அன்றுடங் காச்சிகள் வேலை போய்விட்டால் சோத்துக்குக்கு வேறு வழி இல்லாதவர்கள், வாரக் கணக்கில் படாதபாடு பட்டுக்கொண்டு வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்; தங்களுடைய குறைகளைத் தைர்யமாய் எழுத்துக் காட்டுகின்றனர். இவர்களில் யார் சொல்லுவதை நம்புவது? தங்களுடைய வயிற்று நியாயத்திற்காகத் தியாகம் செய்பவர்களது வாக்கையா? மற்று முதலாளிகளின் வாக்கையா?

'ஏழை சொல் அம்பலம் ஏறுமா' என்றபடி கண்ணிருந்தும் குருடுபோல் பாசாங்கு செய்யும் சர்க்காரிடமோ? ஹோரிடமோ உண்மை பலிக்குமா?

மில் சொந்தக்காரர் பிரதிநிதியான மோடி சில நாட்களுக்கு முன் ஒரு விசித்திரமான வாதம் செய்தார். 'தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டதாலேயே. அவர்களுக்குக் குறைகள் அதிகமாக இருப்பதாக நினைப்பது கூடாது' என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். இப்படியும் ஒரு மூளை இருக்கிறதே என்றுதான் நமக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. இந்தப் பிரகஸ்பதியின் பேச்சின் எதிரொலி போல்தான் தோன்றுகிறது ஹோரின் மழுப்பல்.

ஹோர் என்னதான் மழுப்பினாலும், மோடி என்னதான் 'முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்தாலும்' பொது ஜனங்களுடைய விழிப்பான ஆதரவை அவர்கள் தடுத்துவிட முடியாது. 8,00,00 தொழிலாளிகள் வாரக் கணக்கில் வேலையின்மையில் வீட்டில் சாப்பாட்டுக்குத் திண்டாடிக் கொண்டே, அதே சமயத்தில் மில் முதலாளிகளின் நயவஞ்சகப் பசப்புகளிலும் சிக்காதிருக்கிறார்கள் என்பதைக் காட்டிலும் முதலாளிகளைக் கறைப்படுத்துவதற்கு வேறொன்றும் வேண்டாம். யார் சொல்வது உண்மை என்பதை அறியப் பொது ஜனங்களுக்கு இவ்விஷயம் போதுமானது.

மகான் தோரோவின் பேரெண்ணங்கள்

(தொகுத்தது சங்கு ஸுப்ரஹ்மணியன்)

[மகான் தோரோ அமெரிக்காவில் பிறந்தவர். "எளிய வாழ்வே இன்ப வாழ்வு" என்ற தத்துவத்தைப் பலமாகப் பிரசாரம் செய்தவர். இயற்கைப் பித்தாராதலால் காட்டிலேயே சென்று பல காலம் வசித்தார். அவருக்கு எமர்ஸன் போன்ற பல மேதாவிகள் நண்பராயிருந்தனர். பிரும்மச்சாரியாகவே இருந்து தமது 45-வயதில் காலமானார். நமது மகாத்மா காந்தி போற்றும் உலக மகான்களில் தோரோவும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.]

தேவைக்கு அதிகமான செல்வத்தினால் தேவையற்ற பொருளைத்தான் வாங்க முடியும். ஆத்மாவுக்கு வேண்டியதான ஏதாவதொரு சாமானைக் காசுக்கு வாங்க முடியுமா?

*　　*　　*

ஆகாயக் கோட்டை கட்டினதால் உங்கள் காரியம் வீணாகிவிடவில்லை. அந்தக் கோட்டை அப்படித்தானிருக்கும். அதனடியில் அஸ்திவாரம் கட்ட ஆரம்பியுங்கள்.

*　　*　　*

உனது வாழ்வு எவ்வளவு கேவலமாயிருந்தாலும் சகித்து வாழ்ந்து வா. அதை வெறுக்காதே, வையாதே. உன்னைவிட அது கேவலமானதா?

*　　*　　*

காலையில் சூரியனின் செம்மையையும் குறை கூறுவாருண்டு. ஒருவேளை அவர்கள் அதிகாலையில் எழுந்தால் தான் அப்படிச் சொல்வார்கள். குற்றங் கண்டுபிடிப்பவன் சுவர்க்கத்திலுங் கூட குற்றங் கண்டுபிடிப்பான்.

*　　*　　*

அண்டகோளம் மிகவும் அகலமானது. நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் காட்டிலும் பெரியது.

*　　*　　*

எந்த விஷயத்தைப் பற்றி எழுதப் பட்டதாயினும் நல்ல நூலுக்கு எப்போதும் இடமுண்டு. நல்ல தினத்தில் நிறைய வெளிச்சம் இல்லையா? அதிகக் கிரணங்கள் வந்தால் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்கின்றனவா? ஞானம் கட்டுக் கட்டாய் வருவதல்ல. மின்னல் மின்னலாய் அவ்வப்போது பளிச்சிடும்.

*　　*　　*

புது சாமான் வேணுமென்றும், புது ஆடை, புது சிநேகிதர் இல்லையேயென்றும் வருத்தப்படாதே. பழையவைகளே போதும். திரும்பு. சாமான்கள் மாறுவனவல்ல. நாம்தான் மாறுகிறோம். துணியையெல்லாம் விற்றுத் தொலை. ஆனால் எண்ணங்களை மட்டும் வைத்துக்கொண்டிரு. உனக்கும் சமூகத்துக்கும் சம்பந்தமில்லையெனக் கடவுள் பிரித்து வைப்பார்.

*　　*　　*

யாரார் மலிவான இன்பங்கள் அனுபவிக்கின்றார்களோ அவர்கள்தான் பணக்காரர்கள்.

*　　*　　*

நாம் அறையிலிருப்பதை விடப் பத்துப் பேரோடு இருக்கும் போதுதான் தனிமை ஏற்படுகிறது. எண்ணத்திலுள்ள மனிதனும், வேலையிலுள்ள மனிதனும் அவன் எங்கிருந்தாலும் தனியனாகவே இருக்கின்றான்.

*　　*　　*

திரும்பி ஒன்றைச் செய்வதால் அதை மேன்மையாக்குவதானால்தான் அவவாறு செய்ய உரிமை உண்டு. ஒரே தினுஸாகச் செய்வது இயற்கைக்கு விரோதம்.

*　　*　　*

வாழ்நாளோ குறைவு. ஆகவே சுற்றிச் சுற்றி வரலாமா? காத்துக் காத்துப் பொழுதை வீண் போக்கலாமா?

*　　*　　*

வியாபாரத்தில் பிசுகுவது அசிங்கம். அன்பு விஷயத்திலும் பேரம் பேசக்கூடாது. அம்புபோல் நேராகப் பாய்வதே அன்பு.

*　　*　　*

நாம் அடையவேண்டிய சிறந்த வஸ்து ஞானமன்று. அறிவோடு கலந்த அநுதாபமே நாம் அடைய வேண்டிய பாக்கியம்.

*　　*　　*

உலகைத் துடைத்து சுத்தமாக வைப்பதுதான் கலைத்திறன். ஏதோ ஓர் மூலையையாவது நம்மாலான வரைத் துடைத்து வைப்போமே!

*　　*　　*

உனக்கு மிக மிகப் பிடித்ததான விஷயத்தில் தோழர்களுக்கு இடமில்லை. அப்போது நீ தனி.

*　　*　　*

நான் அவனை அணுகும்போது அல்ல—அவனை விட்டு விலகிப் போகும் போதுதான் அவன் கடவுள் என்பது தெரிகிறது.

*　　*　　*

மோட்ச லோகத்துக்குச் சிபார்சுச் சீட்டு வேண்டாம். கதவைத் தட்டும் போது கடவுளைப் பார்க்கவேண்டுமென்று சொல். சேவகன் தேவையில்லை.

*　　*　　*

உலகம் காலால் தேய்ப்பதற்கே தகுந்தது. மறுமை தலையினால் அடையக்கூடியது. பெரியோர் விரும்புவதும் அதுவே.

*　　*　　*

எண்ணத்தை மறைப்பதற்குத்தான் 'வார்த்தைகள்' என்பன ஏற்பட்டனவா? அப்படியானால் அந்தக் காரியத்தில் நிபுணத்துவம் பத்திரிகைகளுக்கே.

*　　*　　*

சலவைக் கற்சிலையைப் பாலிஷ் செய்தால் சிலையில் நரம்புகள் மின்னுகின்றன. மரத்திற்கு மெருகு பூசினால் அதன் நீரோட்டம் அழகாயிருக்கிறது. அதே மாதிரி வீரத்திற்கு சோபை தருவது கீதம்.

*　　*　　*

ஒரு விஷயத்தைப் பற்றி ஜோஸ்யம் சொல்வதற்கு முன்னே சாந்தமாய் இரு.

*　　*　　*

உடம்பு செவ்வையாயில்லையென்று மருந்து உபயோகிப்பது சகஜமாயிருக்கிறது. ஆனால் மனம் செவ்வையாயில்லையாயின் மாற்று யாரும் தேடுவதில்லை. ஏனோ?

*　　*　　*

மனிதனின் சிறந்த சிருஷ்டி யோக்கியமான ஒரு நூல்.

* * *

இது வீரர்களின் யுகம். ஆனல் நமக்கு அது தெரிவதில்லை. ஏனெனில் மிக எளிய வாழ்விலிருந்தும், புதைபட்ட கூட்டத்தினின்றும் கிளம்புகின்ருன் வீரன்.

* * *

நாகரிகம் மனிதனை நல்ல ஆடையினல் மூடி அலங்காரம் செய்திருக்கிறது.... நாகரிக மனிதனுக்குள்ளே புகுந்து பார்த்தால் அந்த மிருகப் பிராயமான மனிதன்தான் ஆண்டு கொண்டிருக்கிருன்.

* * *

ஒரு உயிர் போனல் இன்னெரு உயிருக்கு இடம் ஒழித்துத் தந்ததாக அர்த்தம். இதுதான் இயற்கை போதிக்கும் உண்மை.

* * *

வேலையைச் செய்து முடி. சரியாக ஆரம்பிக்கத் தெரிந்தால் சரியாக முடிக்கவும் தெரியும்.

* * *

அச்சிட்ட புத்தகத்தில் ஓரம் நிறைய இருப்பது அழகு. அதே மாதிரி மனிதனுக்கு ஒய்வு நிறைய இருப்பது தான் அழகு.

* * *

நியாயத்திற்கு மதிப்பு தருவதற்குப் பழக வேண்டுமேயன்றி அவ்வளவு மதிப்பு சட்டத்துக்குத் தர வேண்டியதில்லை.

* * *

'அன்பு' இல்லாத வாழ்வு அணைந்த தீ; சாம்பல்.

* * *

உழைப்பினல் அறிவும் சுத்தமும் ஏற்படுகிறது. சோம்பரினல் அஞ்ஞானமும் காமமும் விளைகின்றது. காமம் என்பது மனதின் சோம்பேறித்தனமே.

* * *

நன்மையே சிறந்த மூலதனம்.

* * *

புதிய துறையில் வேலை செய்ய வேண்டுமானல் பழைய ஆடைகளை யணிந்தே செய். புதிய ஆடை அணிந்து செய்ய முற்படும் தொழில்களில் நுழையாதே.

* * *

கிழக்கே யிருந்து வெளிச்சம்; மேற்கே பலன்கள்.

* * *

ஸ்திரீயின் பரிவும் பட்சமும், அவளது தீர்க்க தரிசனம் நிறைந்த வழிகளும் மனிதன்மீது ஓர் கவர்ச்சியையுண்டு பண்ணுகின்றன. அவனல் தப்ப முடிவதில்லை.

* * *

உழைக்க உழைக்கத் தான் மாணவனுக்கு எண்ணங்க ளேற்படும். பேனவை அழுத்தமாகப் பிடித்த பிறகுதான் தெரியும். கோடாலி போலவோ, வாளைப் போலவோ பேனவை லாகவமாக உபயோகிக்கப் பிறகுதான் சக்தி யேற்படும்.

* * *

புதுமை யென்ருல் என்ன? பழைமை மீண்டும் கண்ணுக்குத் தோன்றுவது தான். ஆயிரம் அடிக்குக் கீழே குழியைத் தோண்டி அங்கே ஒரு செடி முளைத்தால் இது புதுமை என்கிருேம். ஆகாயத்தில் கூர்ந்து கவனித்து தூரத்திலுள்ள ஓர் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்தால் இது புதியது என்கிருேம். அது தனக்கு மட்டுமே பிரகாசித்துக் கொண்டிருந்தது. நமது பார்வையைவிடச் சக்தி யுடையாதாயிருந்தது. நான் சாதித்த காரியங்களைக் காட்டிலும், நான் கோருபவைகளைப் பற்றிப் புகழ்கின்றவனே சரியான நண்பன். அவர்களையே நான் நம்புகின்றேன்.

* * *

ஒவ்வொரு மனிதனுக்கும் முதுகு உண்டு. அதன் குறுக்கே கை போக மாட்டேனென்கிறது.

* * *

ஒரு சின்னத் தூற்றல் அந்தப் புல் தரையைப் பச்சைப் பசேலென வெகு அழகாகச் செய்து விடுகிறது. அதே மாதிரி செவ்விய எண்ணங்கள் கொஞ்சமாயினும் நம்மை வெகு அழகாகக் கைதூக்கி விடுகின்றன.

* * *

புகார் கூறுவதற்காக நாம் வாழவில்லை. திருப்தியோடு வாழ்வதே வாழ்வு.

* * *

இருக்கிற காற்றின் உதவியைக் கொண்டு, கடுமையான கஷ்டங்களைத் தாண்டச் செல்பவனே சரியான மாலுமி.

* * *

என்ன உழைப்பு உழைத்தாலும் சினேகிதர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொள்வதென்பது கஷ்டம்தான். மனிதர்களின் உறவுமுறை எந்த விதத்திலிருக்க வேண்டுமென்பது இதனின்றும் தெரிகிறதல்லவா?

* * *

வாழ்க்கையின் பெரும்பான்மையான பாகங்களை உயிர் வாழ்வதற்காகச் செலவிடுகின்ருனே அவனைப் போலத் தப்பு செய்பவன் வேறெவனுமில்லை.

* * *

பிரார்த்தனைகளையும், நம்பிக்கைகளையும் காட்டிலும் மனிதனுடைய விரல் நுனியில்தான் ஆண்டவன் அருள் இருக்கின்றது.

* * *

எல்லா நாட்களிலும் பட்டினி கிடப்பவன் ஏகாதசியை மதிப்பானு?

* * *

வளைய வளையச் சொல்வது எப்போ? விஷயம் புரியாத போதுதான்.

வாங்கத் தவறுதீர்கள்!

வாசிக்க வேண்டிய புத்தகங்கள்!!

ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரியார்

எழுதிய

சங்கீத வித்வான் **கிட்டப்பா சரிதம்**

விலை அணு 2.

டால்ஸ்டாய் அல்லது மகாத்மா காந்தியின் குரு

விலை அணு 3.

தபால் கூலி வேறு.

வியாபாரிகளுக்கு ஏராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

கந்தன் பிரஸ்,

32, பிராட்வே, சென்னை.

எத்தனை துயரமடி !

("ராஜாத்தி"யின் கடிதம்)

என் நேச ரங்கம்,

திரும்பவும் அந்த வேலையில் இறங்கி விட்டாயே. உன்னைப் பற்றிக் குறை கூறிப் பயனில்லை. உனது இயல்பு அது. மனத்தைக் கொள்ளை கொள்ள உன்னிடம் ஓர் வித்தை இருக்கிறது. மறுபடியும் நிலவைப் பற்றி ஒரு அழகிய சித்திரம் தீட்டிவிட்டாய்.

'சித்திரம்' என்றவுடனே, கோபம் கொள்ளாதே. 'சித்திரம்', என்ற வார்த்தையால், உன்னை ஏமாற்றப் பார்க்கிறேன் என்று சொல்லி, என்னைக் குற்றம் சாட்டிவிடாதே. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "ஒரு மண் வெட்டியை மண் வெட்டி என்றே சொல்லு" என்பது அந்த மூதுரை. சித்திரத்தைச் 'சித்திரம்' என்றுதான் எனக்குச் சொல்லத் தெரியும். பிறர் சொன்ன கதைகளை, கருத்துக்களை, என் சொந்த சிருஷ்டி போல நடித்து மயக்கும் சாதனமாக, வார்த்தைகளை உபயோகிக்க எனக்குத் தெரியாது. எனக்குக் கம்பராமாயணம் தெரியுமா, சிலப்பதிகாரம் தெரியுமா, மணிமேகலைதான் தெரியுமா? அவற்றில் உள்ள கதையை நானும் ஒரு தடவை திருப்பிச் சொல்லி, "ஆஹா! என்ன சித்திரம்! இதுவன்றோ சித்திரம்! அபார சித்திரம்!" என்று, உன்னையோ உலகத்தையோ ஏமாற்ற எனக்குத் தெரியாது; தெரிந்தாலும் மனம் வராது. ஆகையால், 'சித்திரம்' என்ற வார்த்தையை நான் சொல்லும்பொழுது உள்ளபடி ஏற்றுக் கொள்.

நிலவில் நீ கண்ட காட்சிகள் இன்பக் காட்சிகள். சூரிய ஒளியின் கனலை விழுங்கி வடிக்கட்டிக் குளிர்ச்சி செய்து இந்தப் பூமியின் மீது உமிழ்கின்றது சந்திரன். அந்த நிலவு எல்லாரும் இன்புற்றிருக்கவே இயற்கை யளித்த கொடையா யிருக்கலாம்.

நிலவில் மரஞ்செடி கொடிகளும் ஆறு மலைகளும் புதியதொரு அழகைப் பெறுகின்றன; குழந்தைகள் குதித்துக் குதித்து விளையாடுகின்றன; காதலர் இன்ப மதுவில் திளைக்கின்றனர். "எத்தனை அழகடி, இந்த உலகத்துக்கு" என்று கேட்கும் நீயே, "எத்தனை துயரமடி" என்று முடிக்கின்றாய். இங்கேதான் நான் உனக்கொன்று சொல்ல விரும்புகிறேன்.

"இந்த உலகத்திற்கு" என்பது உபசாரம். "எத்தனை துயரமடி, இந்த மனிதர்களுக்கு" என்பதுதான் உன் கருத்து. மனிதர்களின் துயரத்தை மேலெழுந்தவாரியாக மூன்று வகையாய்ப் பிரிக்கலாம். (1) இயற்கை சில துயரங்களைத் தருகின்றது; (2) பொது வாழ்க்கையின் சட்ட திட்டங்களும், தர்மாதர்ம உணர்ச்சிகளும் சில துயரங்களைத் தருகின்றன; (3) ஒரு மனிதன் தானே தனது பிழையான காரியங்களாலும், உணர்ச்சி அபிப்பிராயங்களாலும் சில—சில என்று கூறுவானேன்—பல துயரங்களைத் தேடிக் கொள்ளுகிறான்.

இந்த மூன்று வகைத் துயரங்களுக்கும் வெவ்வேறு மாற்றுக்களுண்டு. முதலிலேயே எச்சரிக்கின்றேன், ஒன்றை யொன்றுடன் போட்டுக் குழப்பிவிடாதே. அப்படிக் குழப்பிக் குழப்பித்தான் நாம் இந்தச் சீரழிந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம்.

இயற்கை தரும் துயரத்தைத் தாங்குவதற்கு வேதாந்தம் வேண்டும். ஓயாத ஆராய்ச்சியும் தத்துவ தர்சனமும், பெரியோர்களின் துணையும், நமது கற்பனா சக்தியின் மலர்ச்சியும் இயற்கையுடன் நம்மை உறவு கொள்ளச் செய்கின்றன. அந்த உறவு, முடிவான ஆறுதல். நமது சோம்பேறித் தனத்துக்கோ, கோழைத்தனத்துக்கோ, அசதிக்கோ ஏற்பட்ட ஊன்றுகோலாக அதைக் கருதக் கூடாது. நமது சோர்வை நீக்கி, குதூகலமடையச் செய்யும் தத்துவம் அது.

பொது வாழ்வில் பல புல்லுருவிகள் முளைத்திருக்கின்றன. அவற்றால் வரும் துயரங்களை நீக்குவதற்குப் பொது முயற்சி வேண்டும். 'தன் வயிறுண்டு, தானுண்டு,' 'ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன' என்ற எண்ணங்களெல்லாம் ஒழிந்து தொலைந்தால், பொது வாழ்வுத் துயரங்கள் தாமே மாய்ந்து போகும்.

தனி மனிதன் தானாய்த் தேடிக் கொள்ளும் துயரங்களைப் பற்றி என்ன சொல்லுவது! அவற்றின் லாப நஷ்டங்களுக்கு அவன்தான் பாத்தியம். இதற்கு மேல் என்ன சொல்லக் கிடக்கிறது.

இதெல்லாம் இப்பொழுது நமது நாட்டில் தாறுமாறாய் இருக்கிறது. அதர்மமான ஒரு சட்டம் அல்லது சம்பிரதாயத்தால் ஒருவன் கஷ்டப்பட்டால், அவனைப் பெருங் குற்றவாளி போல் நினைத்து நாம் ஒடுகிறோம்; அவனாகச் செய்து கொண்டது என்று பிதற்றுகிறோம். அவனாகவா? அந்த மனிதன் மூலமாக—அவனைக் கருவியாகக் கொண்டு—இயற்கையின் தெய்வ சட்டம், 'மூடரெல்லாம், செய்த விதி' களோடு போராடுகின்ற தென்பதை நாம் உணர வேண்டும்; அவனிடம் அனுதாபத்துடன் நடக்க வேண்டும்.

தனக்குத்தானே துயரத்தைத் தேடியடைந்தவன், 'விதி' என்கிறான்; 'தெய்வம்' என்கிறான். மனிதனுடைய பாஷைக்கே இவன் விரோதி. பாஷையைத் திரித்து, எதிரே நின்று பதில் சொல்ல முடியாத சங்கதிகளின் மீது குற்றம் சாட்டி ஆறுதல் பெற்றுமடியும் இந்த மனிதனை நாம் அடியோடு மறந்து விடலாமா? வேறு என்ன தான் செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

"எத்தனை துயரமடி." என்பதோடு நின்று விடவேண்டியதுதான் என்று நீ இன்னும் நினைக்கிறாயா? இப்படி நான் கேட்பது உன் சித்திரத்துக்குப் பங்கமென்று கருதாதே.

உனது

ராஜம்.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

காப்பி யடித்தல்

(காளிதாஸன்)

இலக்கியத்திற்காக இலக்கணம்; இலக்கணத்திற்காக இலக்கியமல்ல. இவ்வுண்மையைப் பண்டிதர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

எதுகை, மோனை, சீர் தளை முதலிய கட்டுப் பாடுகளை நான் வெறுக்கவில்லை. செற்கோர்வைச் சட்டமும், வாக்ய அமைப்புச் சாஸ்திரமும், கட்டுரை விதிகளும் தப்பல்ல. இவைகள் எல்லாம் அரிச்சுவடி. இக்கட்டுப் பாடுகளை மீறிப் போனாலும் ஒளியுடைய எழுத்துக்களை நான் எறிந்துவிட மாட்டேன்.

ஆறு ஒரு சிறு ஊற்றிலே ஆரம்பமாகிறது. அவ்விடத்தில் அவ்வாற்றின் அலகம் ஒரு அடிகூட இராது. ஆனால் அதே ஆறு சமுத்திரத்தில் கலக்கும்போது அகண்ட, பிரம்மாண்டமான பெருமையை அடைந்துவிடுகிறது. ஒரு அடி அளவுக்குள் தான் ஆற்றின் அகலம் ஓடவேண்டும் என்பது முட்டாள்தனம். ஒரு ஜாதியின் இலக்கிய வளர்ச்சியும் இப்படித்தான். ஒவ்வொரு பெரிய கலைஞனும் தனக்கு முன்பிருந்த கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு கம்பீரமான ஒரு புதுமையை சிருஷ்டித்து விடுகிறான். அப்புதுமைக் கேற்ப இலக்கணத்திலும் புதுப் புதுக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அப்படிக்கின்றி கட்டு திட்டங்களில் கவிதையோ, கலையோ அடங்கிக் கிடக்க வேண்டுமென்பது இலக்கியத்தின் சுவை யறியாதவர்களின் பேச்சு. ஒவ்வொரு இலக்கியமும் 'மலடிவயிற்று மகன் போலே' புதுமையாய் இருக்கவேண்டும். இதுதான் கவிராயனது கொள்கை.

நமது தமிழ் மொழியிலே இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் சிலப்பதிகாரம் என்றோர் ஓர் புதுமைக் காவியம் பிறந்தது. அக்காலத்தைச் சிலப்பதிகார சகாப்தம் என்று கூறிவிடலாம். பின்னர் நால்வர், பன்னிருவர் சகாப்தம். அப்புறம் கம்பன் சகாப்தம். அருணகிரியின் சகாப்தம். 'சிந்துச் சிறுகவிதை' எழுதிய அண்ணாமலை ரெட்டிகூடத் தமிழ் பாஷையில் ஒரு புது ஜாலத்தை சிருஷ்டித்து விட்டான். பாரதியோ முத்தாய்ப்புக்கு மேல் முத்தாய்ப்பாக வீரத் தமிழ் எழுதிக் குவித்தான். இதை எதற்காகச் சொல்லுகிறேன் தெரியுமா? ஒவ்வொரு கலைஞனும் புதுப்புது மாதிரியான சிருஷ்டிகள் செய்யவேண்டும்.

தமிழ் நாட்டை இப்போது ஒரு மூளை ஜுரம் பற்றி யிருக்கிறது, அறிவு மங்கிக் கிடக்கிறது; உணர்ச்சி புதைந்து போய்விட்டது. 'குதிரைக்குக் குர்ரம் யானைக்கு அர்ரம்' கொள்கை பரவி வருகிறது. பண்டிதர்களின் பொருள் விளங்காத கொடுந் தமிழுக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்ட எளிய நடை இயக்கம் எல்லோரும் எள்ளி நகையாடத் தக்க கொச்சைத் தமிழின் கொளகொள நடையாக மாறி விட்டது. கொச்சைத் தமிழ் தப்பல்ல. அளவோடிருந்தால் அதுவும் தித்திக்கும். ஒருவர் ஒரு நடை எழுதி விடுகிறார். மறுநாளே ஒரு ஆயிரம் பேராவது அதைக் காப்பி யடித்து விடுகின்றனர். அப்புறம் அது நம்முடைய காதையெல்லாம் துளைத்துச் செவிடாக்குகிறது. பாரதியார் கூறிய 'இரும்புக் காது' நமக்கு இல்லையே என்று தோன்றுகிறது.

புதுமையாக ஒன்றையும் சொல்லத் தெரியாதவன் வாயை மூடிக்கொண்டு சும்மா யிருப்பதுமேல். காப்பி யடிப்பதையும் தப்பிதம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் பல பெரிய எழுத்தாளர்களைக் காப்பி யடித்துப் பழகினால் நயக்காக வென்றே ஒரு புது பாஷை நடை உண்டாகிவிடும். அதன் பிறகுதான் நாம் இலக்கியம் எழுத லாயக்குள்ளவர்கள் ஆவோம்.

இதற்குள்ளாகவே பழமையெல்லாம் தப்பு என்னும் கோஷ்டியில் என்னைச் சேர்த்துவிடக் கூடாது. பழமையான கம்பராமாயணமும், தாயுமானவர் பாடலும் தான் எனது உள்ளத்திற்கும், உயிருக்கும் விருந்து. ஆனால் அதற்காக அதேமாதிரி காப்பியடிப்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. கம்பன் கவிதை அவனது சொந்த நடை; அதைக் காப்பி யடித்து அதைக் காட்டிலும் அழகாக நாம் ஒன்றும் சிருஷ்டித்து விட முடியாது. உதாரணம் சொல்லுகிறேன். அண்ணாமலை ரெட்டியின் கவடிச் சிந்து மெட்டில் ஆயிரக் கணக்கில் சிந்துகள் வெளி வந்திருக்கின்றன. ஆனால் ஒன்றாவது அவ்வளவு அழகானது உண்டா? பாரதியாரின் காவடிச் சிந்து கூட ரெட்டியாரின் சிந்து முன்னால் தலைகுனிய வேண்டியது தான் என்பது அடியேனது தாழ்ந்த அபிப்பிராயம். சிருஷ்டி, சிருஷ்டி, முக்காலும் சிருஷ்டி என்பது தான் கலைஞனது தொழில்.

கரடு முரடுத் தமிழ் தப்பு என்பதால் கொள கொளத்த கொச்சைத் தமிழ் சரியென்று அர்த்தமில்லை. லேசான, எளிய, இனிய, சரளமான தமிழ் எழுத வேண்டும். இதிலே ஒருவனைப் பார்த்து ஒருவன் காப்பியடிப்பது ஒரு புது பாஷை நடையை அருவருப்பானதாகச் செய்து விடுகிறது. ஆகா! பாஷையில் எத்தனை விதமான நடைகள் இருக்கின்றன. ஓட்ட நடை, உருளும் நடை, நடன நடை, நைச்ய நடை, ஊற்று நடை, ஆற்று நடை, எரிமலை நடை, புயற்காற்று நடை, என்றெல்லாம் எழுதிக் கொண்டே போகலாம். இதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நடையை ஏன் பின்பற்றக் கூடாது. வானத்தின் நட்சத்திரங்களை வேண்டு மென்றாலும் எண்ணி விடலாம், பாஷை நடையின் வித்யாசங்களையும், விரிவுகளையும் மட்டும் எண்ண முடியாது. அப்படி யிருக்க சப் ரிஜிஸ்தார் ஆபீஸ் குமாஸ்தாவின் ஈயடிச்சான் காப்பித் தொழிலைத்தான் நாம் பின்பற்ற வேண்டுமோ?

தமிழில் புதுப்புது விதமான பாஷா வியப்புகள் ஏற்பட்டால் தமிழ் நாட்டின் வளர்ச்சியைப் பற்றிச் சந்தேகமே யில்லை. பங்கிம் சந்திரர் முதல் சரத் சந்திரர் வரை வங்காள இலக்கியம் வளர்ந்து வந்திருக்கிறது. புதுப் புது எண்ணங்கள், புதுப் புது வார்த்தைகள், புதுப் புதுக் கலைகள் தினே தினே கிளம்பிக் கொண்டே யிருக்கின்றன. பின்னர் வங்காளம் எத்துறையிலும் முன்னணியில் இருப்பதற்குக் கேட்பானேன்?

தமிழர்களே உங்கள் வளர்ச்சிக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

காணமற் போன கச்சை

("குகப்ரியை")

"டக், டக், டக்" என்று பாதக் குறடு கட்டையின் சத்தம் கேட்டது.

என்னடீ இது, மணி பத்துப் பதினொன்றுக்கு மேலிருக்கும் போலிருக்கிறதே? இன்னுமா தூங்கவில்லை. மாணிக்கம்! அண்ணன் என்ன செய்கிறது? மாடிக்குப் போய்ப் பார் என்று கூறினாள் அங்கையற்கண்ணி அம்மாள்.

"பாலைக்கூட வைத்துவிட்டுப் போயிருச்சே, நான் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக் கையில் பாற் சொம்பையும் எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள் மாணிக்கம்.

மாடியின் முன் தாழ்வாரத்தில் வாயில் நீண்ட சுருட்டொன்றைப் பற்ற வைத்தவண்ணம் உலாவிக் கொண்டிருந்தார் ஜினேந்திர நாயனார். மாணிக்கம் வரும் சத்தத்தைக் கேட்டு 'என்ன? மாணிக்கம்! இன்னுமா தூங்கவில்லை என்று கேட்க, பாலைக் கீழேயே வைத்துவிட்டு வந்துவிட்டீங்க, அம்மா எடுத்துவந்து கொடுக்கச் சொல்லிச்சு' என்று கூறிய வண்ணம் சொம்பை ஜன்னலில் வைத்தாள் மாணிக்கம்.

"நீ போய்த் தூங்கு, அம்மா? அம்மாளையும் தூங்கச் சொல்லு. எனக்குத் தூக்கம் வரவில்லை."

"தலை நோவா? உடம்பு சுகமில்லையா?" என்று கேட்டாள் மாணிக்கம்.

"உனக்கென்ன அதைப் பற்றி, போய்த் தூங்கு பேசாமல்," என்று சற்றுக் கடுகடுத்த குரலிற் கூறினார் நாயனார்.

மாணிக்கம் எப்பொழுதுமே கொஞ்சம் குறும்புத்தனமுள்ள பெண். சமீபத்தில்தான் நாயனார் அவளுக்குப் பாரதி புஸ்தகங்களெல்லாம் வாங்கிக் கொடுத்திருந்தார். அதட்டிக் கூறியதையும் பொருட்படுத்தாமல் வேடிக்கையாக,

"அந்தி மயங்க விசும்பிடைத்தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை"

அண்ணா சிந்தை செய்கிறார் போலிருக்கிறது என்று சிறு நகை தோன்றக் கூறினாள் மாணிக்கம்.

வாயிலிருந்த சுருட்டைக் கையிலெடுத்துக்கொண்டு மிகுந்த கோபத்துடன், "அடி செருப்பாலே, சமயா சமயம் தெரிகிறதில்லை. இப்பொழுது உன்னை யார் இங்கே பாடச் சொல்லி அழைத்தார்கள்" என்று கையை ஓங்கினார் நாயனார்.

மாணிக்கம் ஒரே பாய்ச்சலாய்க் கீழே இறங்கி ஓடினாள். சற்றுக் கோபந் தணிந்தவராய் 'தொப்'பென்று நாற்காலியிலுட்கார்ந்தார் நாயனார்.

கோயிலூர் என்பது ஓர் அழகிய சிற்றூர். ஜினேந்திர நாயனார் அவ்வூரிலுள்ள பிரபல வெல்ல வியாபாரிகளுள் ஒருவர். அவ்வூர் வாசிகளுள் பெரும்பாலோர் தென்கலை வைணவர்களும், ஜைன வேளாளர்களுமே. "துண்றங்கோட்டை" சாமியார்தான் ஜைன வேளாளர்களுக்கெல்லாம் குரு. ஆனால் அவ்வகுப்பிலேயே பெண்கள் அதிகம் கிடைப்பதில்லையாகையால், அவ்வூர் ஜைன வேளாளர்கள் சைவ வேளாளப் பெண்களையே மணந்திருந்தனர். அவ்வூர் வாசிகளிற் பெரும்பாலோர் வியாபாரிகளும் விவசாயிகளுமே யாவர். கரும்பு, புகையிலை நிலக்கடலை இம்மூன்றுமே அங்கு பிரதானமாய்ச் சாகுபடி செய்யப்படுபவைகள். ஜினேந்திர நாயனார், பீ.ஏ. பட்டம் பெற்றவர். நூதன முறைப்படி தனது விளை நிலங்களைச் செப்பனிட்டு "ஆயில் எஞ்சின்" அமைத்து தண்ணீர் வசதிகளையும், கருப்பஞ்சாறு பிழிதல் முதலியவைகளையும் எஞ்சின் உதவியினாலேயே செய்து கொழுத்த லாபமடைந்தவர். வருடந்தோறும் திண்டிவனத்திலிருந்து எலும்புத்தூள் எருவும், நெல்லிக்குப்பத்து விவசாயப் பண்ணையிலிருந்து இராசயன எருக்களும் வரவழைத்து தாமே நேரிற் சென்று நிலங்களுக்குப் போட்டு ஒழுங்குபடுத்துவார்.

கடந்த மூன்று நான்கு வருடங்களாகக் கொழுத்த லாபமடைந்திருந்த அவருக்கு இவ்வருடம் திடீரென்று அகவிலை இறங்கி விட்டபடியாலும், வெல்லம் ஒரேயடியாய் வீசை ஈட்டணாவிலிருந்து இரண்டரை அணாவுக்கு வந்துவிட்டபடியாலும், பண நெருக்கடியினால் நிரம்பவும் சிரமப்படலானார். அவரது மனைவி பூங்கோயிலம்மை "பேறு காலத்தின் பொருட்டு" பிறந்தகமாகிய சாங்கியம் என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்தாள்.

திடீரென்று வெல்ல வியாபாரத்தில் நஷ்டம் வந்துவிட்டதனால் எங்கே தன் மகன் வருந்தி உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்ளப் போகிறானோ வென்ற கவலையோடு முன்னிலும் இருமடங்கு அன்புடன் பராமரித்து வரலானாள் அங்கையற்கண்ணியம்மாள். சற்றுப் பொழுது போக்காகவிருக்கட்டுமென்று தனது தம்பியான குபேரநாயினாரையும் வரச்சொல்லியிருந்தாள். மாணிக்கத்தையும், ஜினஸ்வாமியையும் தவிர அவளுக்கு வேறு குழந்தைகளில்லையாதலாலும், மாணிக்கம் பருவமடைந்தும் இன்னும் விவாகம் செய்விக்கவில்லையாதலாலும் இருவரையும் இரு கண்மணிகள் போல் பாதுகாத்து வரலானாள் அங்கையற்கண்ணியம்மாள்.

* * *

"மணி எட்டாயிற்று. அண்ணன் இன்னும் எழுந்திருக்கவேயில்லை. நீயாகிலும் போய்ப் பாரேன்."

"ஐய்யய்யோ நான் போனால் ஒரேயடியாய்த் திட்டும். நீயே போய் வா" என்றாள் மாணிக்கம்.

அங்கையற்கண்ணியம்மாள் மெதுவாய் மாடிப் படியேறிச் சென்றாள். படுக்கையிற் சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார் நாயனார்.

"ஏனப்பா, ஒரு மாதிரியாயிருக்கிறாய்? உடம்பு சுகமில்லையா?... மாயாண்டிப் பண்டிதரைக் கூட்டிவரச் சொல்லட்டுமா?"

"ஒன்றுமில்லை. சும்மா நச்சு நச்சென்று மல்லுக் கொடுக்காதே. காப்பியும் வேண்டாம், கீப்பியும் வேண்டாம். இன்னும் ஒரு மணி நேரம்

கழித்து கீழே வருகிறேன், நீ போ” வென்று எரிந்து விழுந்தார் நாயனார்.

அங்கையற்கண்ணியம்மாளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மெதுவாய் மாடிப் படியை விட்டிறங்கினாள்.

கூடத்தில் வீசுப்பலகையின் மீது உட்கார்ந்திருந்த குபேர நாயனார், “அக்கா! தம்பிக்கு என்ன? உடம்பு சுகமில்லையா. நேற்றுப் புதுச்சேரியிலிருந்து வெல்ல மண்டி பெத்தாச்சி செட்டியார் மருமகன், குட்டையன் செட்டி, “ஈரங்கி” விஷயமாய் இங்கே வந்திருந்தான். செட்டியாருக்குத் தம்பி போன வருஷத்து பாக்கி கைமாற்றாக வாங்கிக் கொண்டிருந்த இரண்டாயிரம் ரூபாயில் ஆயிரம் ரூபாய் நோட்டாக ஒரு ஆயிரம் அனுப்பியதாகவும், பாக்கி போன மாதக் கடைசியிலேயே அனுப்பிவிடுவதாகச் சொல்லியிருந்ததாகவும், மாதம் பிறந்து 10 தேதியாகியும் பணம் அனுப்பி வைக்காத காரணம் தெரியவில்லை என்றும், அதைக் கேட்டு வரும்படி சொன்னதாகவும் சொன்னான். அதற்கு நான் தம்பிக்கு உடம்பு சுகமில்லை என்றும், நாளைக் காலையில் வந்து கண்டு போகும்படியும் சொல்லி வந்தேன். அதைப் பற்றி தம்பி உன்னிடம் ஏதாவது சொன்னானா?”

“என்னத்தைச் சொன்னான் சுரைக்காய்க்கு உப்பில்லை என்று. எதைக் கேட்டாலும் லொள், லொள் என்று எரிந்து விழுகிறான். இரா முழுவதும் தூங்கவுமில்லை. நானும் ஏதாவது கொஞ்சம் இடங்கொடுத்தால் கேட்கலாமென்றுதான் பார்க்கிறேன். வாயைத் திறந்தால்தானே. குழந்தை மாணிக்கத்தையாவது கேட்கச் சொல்லுவோமென்றால், அதுவும் பயப்படுகிறது. பத்துப் பதினைந்து நாளாகவே இப்படித்தானிருக்கிறான். நீதான் மெதுவாய்க் கேளேன்” என்றாள் அங்கையற்கண்ணி அம்மாள்.

“நான் கேட்டுவிட்டாற் போதும், உடனே ஆசாயத்திற்கும் பூமிக்குமாய் ஒரே குதியாய்க் குதித்து விசுவரூபம் எடுத்துவிட மாட்டானா. நான் கேட்டுப் பிழைக்கவா? அப்பப்பா, அவன் முன்கோபத்திற்கும் எனக்கும் எங்கைக்கெங்கே. எட்டேணி வைத்தாலும் எட்டாது. உன்பாடு அவன் பாடு. எப்படியாவது விஷயம் இன்னதென்று தெரிந்துகொள், பிறகு ஆலோசிக்கலாம் என்றார் குபேர நாயனார்.

இடையில் மாடியின்மேல் ஜினேந்திர நாயனார், ஏதோ வாய்விட்டுப் புலம்புவதுபோற் சத்தம் கேட்டது. அங்கையற்கண்ணியம்மாள் பூனைபோல் அடிமேலடி வைத்து மாடிப் படி ஏறி என்ன சொல்லுகிறானென்று உற்றுக் கேட்கலானாள்.

* * *

“அடாடா! என்ன ஆச்சரியம்? இடுப்பில் கட்டிக்கொண்ட ‘பெல்ட்’ எப்படி மாயமாய் மறைந்துபோயிற்று. கடையில் நோட்டுக்களைக் கிழித்தது ஞாபகமிருக்கிறது. ஒரே தடவையில் முழு நோட்டை வைத்தனுப்புவது அபாயமென்று, பாதியாய்க் கிழித்ததும், நானே தைத்து சீல் செய்ததும் நன்றாய் ஞாபகமிருக்கின்றன. மற்ற பாதியை பெல்ட் பையில் வைத்துக் கொண்டதும் நன்றாய் நினைவிருக்கிறது. பிறகு என்ன செய்தேன். எங்கே போயிற்று.................... அதுதானே ஞாபகமில்லை. யாராவது திருடிக்கொண்டு போயிருக்கலாமென்று நினைப்பதற்கும் இடமில்லை. நான் இந்த மாதிரி இன்ஷ்யூர் செய்யப் போகிறேனென்று ஒருவருக்கும் தெரியாது. செட்டியாரிடமே நேரில் கொடுக்கப் போவதாய்த்தான் சொல்லியிருந்தேன். பாதி நோட்டுகள் போய்ச் சேர்ந்த ரசீதும் வந்தாயிற்று. அப்படியே திருடியிருந்தாலும், பாதி நோட்டைத் திருடித் திருடன்தான் என்ன செய்வான். நம்பர்களையும் போலீசிலும் பதிய வைத்தாயிற்று. அவர்களும் இதுவரையிலும் ஒன்றும் தகவல் சொல்லக் காணோம். கஷ்ட காலம். பேசாமல் புதுச்சேரிக்குப் போய் நேரிலேயே கொடுத்துவிட்டு வந்திருக்கலாம். “விநாச காலே விபரீத புத்தி” என்றபடி போராத வேளைக்கு எல்லாம் வந்து கூடிக் கொள்ளுகிறது. இப்பொழுது திடீரென்று 2,000க்கு எங்கே போவது. ஓரிடத்திலிருந்தாவது பணம் பெயருவதாகக் காணோம். இவ்வளவு காலமாய் கெட்ட பெயரெடுக்காமல் வாழ்ந்தாயிற்று. இனிமேல் யார் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான். ஆண்டவனே! இந்த கஷ்ட காலத்தில் என்னைக் கண் திறந்து பார்க்கக்கூடாதா. கஷ்ட காலம். சனியனை விலைக்கு வாங்குவது போல் ஏன் இந்த குயுக்தி எல்லாம் செய்தேன். ஒரேயடியாய் முழு நோட்டுக்களையுமே வைத்து இன்ஷ்யூர் செய்திருக்கலாகாதா? நாளைக்குச் செட்டி வந்து குடுமியைப் பிடித்துக்கொண்டால், சந்தியில் நிற்க வேண்டியதுதான். வெல்ல மூட்டையையோ, கடலை மூட்டையையோ வாரிக்கொண்டு போகட்டும். அப்பப்பா, படுபொல்லாதவனாயிற்றே அவன். சளைத்த சமயமென்றால் கிட்டி போட்டு நெருக்குவானே. இதுவரையில் என் விஷயத்தில் கடுமையாய் நடந்து கொள்ளவில்லை என்றாலும் காலவித்யாசம் அவனும் மென்னியைப் பிடித்தாலும் பிடிப்பான். அற்பக்காசு. இரண்டாயிரம் ரூபாய். பதினாயிரக் கணக்கில் புரட்டிக்கொண் டிருந்த எனக்கே இது ஒரு மலையாய்விட்டதே. காலம் அப்படி இருக்கிறது. நெல்லும், கடலைக் கொட்டையும் அம்பாரம் அம்பாரமாய்க் குவிந்து கிடக்கிறது. வாங்குவாரைத்தான் காணோம். இன்னும் ஆறு மாதம் கிடந்தால் எலிகளையும் பெருச்சாளிகளையும்தான் வாடிக்கை பேச பேசவேண்டும். வீட்டிலிருந்த தூசு, துப்பட்டி எல்லாம் பொறுக்கி எடுத்து வரிகட்டியாயிற்று. அடுத்த கிஸ்திக்கு தேசிங்கு ராஜன் சொன்னமாதிரி “வரகு வைக்கோல் மெத்தக்கிடக்குது வாரிப்போகச் சொல்லு” என்று சொல்ல வேண்டியதுதான். பணம் கொடுக்க வேண்டியவர்கள் புல்லையும், கொள்ளையும் கொடுக்கிறேன் என்கிறார்கள். நாம் கொடுக்கவேண்டியவர்களோ ரொக்கத்தைக் கொண்டுவாவென்று கழுத்தின் மேல் கத்தியை வைக்கிறார்கள். மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல் இருக்கிற தொல்லைகள் போதாமல் இந்த பாதி நோட்டாய் கிழித்து இன்ஷ்யூர் செய்த வியாபாரம் நாமே வலியச் சென்று தேடிக்கொண்ட வைபவம். கடவுளே, கடவுளே, என்னதான் செய்து தொலைப்பேன். அம்மாவிடம் சொன்னால்தான் என்ன? அவள் என்ன செய்வாள் பாவம். ஐயா செய்து போட்டிருந்த தங்க நகைகளையெல்லாம் ஜினசாமி நாயனாரவர்கள் தலையெடுத்து விற்றுவிற்றுத் தொலைத்தாயிற்று. குழந்தை மாணிக்கம் பொன் காய்த்தமரம் போலிருந்தவள் உருவிய கோலமாய் நிற்கிறாள். இந்த

லக்ஷணத்தில் வேண்டாத பேரிழவுகளெல்லாம் வந்து "வாணானை வாங்குகிறதுகள்" எப்படியாவது சாவரன் மலிந்ததும் குழந்தைக்கு ஏதாவது செய்யலாமென்று எண்ணப் போக "அபராதண்டம்" 2000 ரூபாய் அழும்படி வந்திருக்கிறதே. கிரகசாரம். தலைவிதி, தலைவிதி, என்று படீர் படீர் என்று தலையிலடித்துக்கொண்டு படுக்கையில் தொப்பென் றுட்கார்ந்தார் நாயனார்.

விஷயம் விளங்கிவிட்டது. அங்கயற்கண்ணி என்னசெய்வாள். இன்னது செய்வதென் றறியாமல் தத்தளிக்கலானாள். குபேர நாயினார் மாடிப்படியின் கீழ் நின்று தன் தமக்கையை வரும்படி சமிஞ்ஞை செய்ய அங்கயற்கண்ணி அடிமேலடி வைத்துக் கீழே வந்தாள்.

* * *

"அக்கா? இந்த இரண்டு மூன்று நாட்களாய் நானும் வேண்டிய பிரயத்தனங்களெல்லாம் செய்தாகிவிட்டது. ஒரு மூலை முடுக்கு, காக்கை கூடு முதல் வேலைக்கார அங்கப்பன், அம்மாயி இவர்கள் எல்லோருடைய வீடுகளையும் கூட இரகசியமாய்ப் பார்த்துவிட்டேன். மனித யத்தனத்தில் எவ்வளவு செய்யலாமோ அவ்வளவும் செய்துவிட்டேன். இனிக் கடவுள்தான் வழிவிடவேண்டும். நான் என்ன செய்யட்டும்" என்று கூறிப் பெரு மூச்செறிந்தார் குபேரநாயினார்.

"தம்பி, நான் குறிகேட்டுப் பார்த்தேன். மூன்று தனித்தனி மனிதரிடம் கேட்டேன். எல்லோரும் கிடைத்துவிடும். வீட்டு மனிதர்கள்தான் எடுத்திருக்கிறார்கள் என்று ஒரே விதமாய்க் கூறினார்கள். இருப்பதோ நாம் மூவரும்தான். அவனோ போக்கடித்தவன். யார் எடுப்பது. நீயா நானா குழந்தை மாணிக்கமா? இந்தக் குறிகேட்ட வயிற்றெரிச்சலை அவனிடம் கூறினால், அவனுக்குத்தான் முன்யோசனையே கிடையாதே. உடனே நீதான் எடுத்திருப்பாய் என்று சாதிப்பான். நாம் என்ன செய்யலாம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மூன்றுநாளாய் வேளைக்குச் சோறு தண்ணீரின்றி தூக்கமும் கெட்டுப் பித்துப் பிடித்தாற்போ லிருக்கிறது. என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் என் கம்மலைக் கொடுத்தாலும் அது ஐநூறு காசு பெறாது. அவனோ ஒரு கவளம்கூட சாப்பிடுவதில்லை. கடவுள் இப்படி சோதிக்கிறார்." என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் அங்கயற்கண்ணி.

* * *

நடுநிசி. ஜினேந்திர நாயனார் பற்பல அபூர்வராகங்களில் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண் டிருக்கிறார். அவர் அறையில் சிறு விளக்கொன்று 'முணுக் முணுக்',கென்று எரிந்துகொண் டிருந்தது. எங்கும் ஒரே அமைதி குடிகொண்டிருந்தது. சற்று நேரத்திற் கொருமுறை ஆந்தைகள் அலரும் சத்தம் மட்டுமே கேட்டது. குபேர நாயினார் அவர் அறையை அடுத்த தாழ்வாரத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலிற் படுப்பது வழக்கம். அன்று அவர் நித்திரை கொள்ளாதவராய்ப் படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தார். அவர் மனம் சொல்லொணாதபடி குழப்பத்தில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது.

பண்டாபீஸ் மணி "டாங், டாங்" என்று பன்னிரண்டடித்தது. ஜினேந்திர நாயனார் படுத்திருந்த அறையினின்றும் கையில் ஒரு சிறு சவுக்கத்துடன் ஒரு உருவம் வெளியே வருவதுபோல் தோன்றிற்றிற்று. அவ்வுருவம் நேரே தாழ்வாரத்தைத் தாண்டி மேல் மாடிக்குச் செல்லும் படியேறி செல்வதைக் கண்ட குபேர நாயினாருக்கு உடல் முழுதும் பயத்தால் வியர்த்தது. என்றாலும் சமாளித்துக் கொண்டு மெதுவாய்ப் பின்தொடர்ந்தார்.

மேல் மாடியில் உபயோகமற்றஒடிந்த நாற்காலி முதலியவைகளை ஓரறையில் போட்டு வைப்பது வழக்கம். இவ்வுருவம் நேரே அவ்வறைக்குட் சென்று தன் கையிலிருந்த சவுக்கத்தை ஆணியில் மாட்டி விட்டுத் திரும்பியது. உடனே குபேர நாயினார் இன்னும் என்ன நடக்கிறது பார்ப்போமென்று மறு புறத்தில் பதுங்கினார். அவ்வுருவம் வெகு விரைவாய் தாழ்வாரத்தின் வழியே சென்றது.

* * *

"அக்கா! அக்கா! எழுந்திரு சீக்கிரம் என்று குபேர நாயினார் தன் தமக்கையைத் தட்டி எழுப்பி வாயின்மேல் கையைவைத்து மூச்சுவிடாதே" என்று கூறியவண்ணம் கையில் விளக்குகளை எடுத்துக்கொண்டு பூனைபோல் நடந்து மேல்மாடிக்குச் சென்றார். அங்கயற்கண்ணியம்மாள் ஒன்றும் விளங்காதவளாய் மிகுந்த திகிலுடன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக்கொண்டே தொடரக் குபேர நாயனார் வெகு துணிவுடன் அவ்வறையில் நுழைந்தார். அவ்வறையின் சுவற்றில் ஓர் ஆணியில் ஜினசாமி நாயனார் புதிதாய் வாங்கிக்கொண்ட "கம்பளிபெல்ட்" மாட்டப்பெற்றிருந்தது. அதனருகேயுள்ள மற்றோர் ஆணியில் ஒரு சவுக்கம் மாட்டப் பெற்றிருந்தது.

குபேர நாயனார் மற்றொரு விளக்கையும் அவளிடம் கொடுக்க அவள் பயத்தினால் சுவர்ப் புறத்தில் தனது முதுகை வைத்துக்கொண்டு யாரையோ எதிர்க்க ஆயத்தமாயிருப்பவள்போல் நிற்கலானாள், கால்கள் கிடுகிடென்று நடுங்கின.

ஒரே பாய்ச்சலாய் ஆணியிலிருந்த பெல்ட்டை எடுத்து அதன் பையைத் திறந்து "அக்கா, இதோபார், காணாமற்போன நோட்டுகள்" என்று கூவினார் குபேர நாயினார்.

"தூக்கத்தில் எழுந்து நடக்கும் வியாதி" தன் மகனுக்கு உண்டென்னும் விஷயம் "பளீச்" சென்று அங்கயற் கண்ணியம்மாளுக்கு ஞாபகம் வந்தது.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரம்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

மோட்சம்

"புதுமைப் பித்தன்" எழுதியது

ராமுக்கு எட்டு வயதுதான். ஆனால் வயதிற்குத் தகுந்த வளர்ச்சி இல்லை. கூழை, ஒல்லி, அடிக்கடி சீக்கு. வீட்டுக்கும் செல்லப் பிள்ளை; அங்கே போகாதே இங்கே போகாதே என்று கேட்டுக் கேட்டுக் கோழைப்பட்ட மனது. அதைச் செய்யாதே என்றால் கொன்றாலும் செய்ய மாட்டான். அவ்வளவு மோசம்.

அம்மா வீட்டிற்கு விலக்கமாகி விட்டால், அந்த ஐந்து நாளும் பள்ளிக்கூடத்தில் உதைதான். வீட்டில் கடைக்குப் போக வேண்டும்; அதை யிதைச் செய்ய வேண்டும், அப்பா சமயலுக்கு உட்கார்ந்து விட்டால், அவர் ஆபீஸுக்கு போக வேண்டாமா? படிக்க, வீட்டுப் பாடம் எழுத நேரம் எங்கே இருக்கிறது. அப்பாவைப் பள்ளிக்கூடத்திற்கு வந்து சொல்லச் சொன்னால் நேரமாகி விடுமாம். அவருக்கு எந்த வாத்தியார் இருக்கார்.

இன்றைக்கும் அப்படித்தான். பயம் போக வேண்டாம் என்று சொல்லுகிறது; அவனால் ஒளிந்துக் கொள்ள முடிய வில்லையே.

'ஸார்' புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுது, மெதுவாகப் போய் உட்காருகிறான். அதற்குள் அந்தக் கழுகுக்கு தெரிந்து விட்டதே.

"டேய்! ராமசாமி, எத்தனை நாள் சொல்லுகிறது, லேட்டா வந்தா' வெளியில் நிற்க வேண்டும் என்று. என்னடா இன்னம் உட்கார்ந்திருக்கே, எறு பெஞ்ச மேலே. 'ஹோம் ஒர்க்' போட்டிருக்கையா?

பதில் இல்லை.

"திருட்டு நாயே! அதுதான் ஒளியிர ஜம்பமோ. வா இங்கே."

தயங்கித் தய்ங்கி நிற்கிறான்.

"வாடா என்றால்,............திண்ணக் கூத்தைப் பார்." கையை எட்டிப் பிடித்து தர தரவென்று மேஜைப் பக்கம் இழுக்கிறார்.

"நீட்டு கையை"

"நாளைக்கு கொண்டு வந்து விடுகிறேன் ஸார்."

"நாளைக்கு அடிக்கலை ஸார். நீட்டு கையை. உம்."

"அய்யோ அய்யோ வலிக்குமே ஸார். அல்லை ஸார்."

"வலிக்கத்தான் ஸார் அடிக்கிறது."

பளீஸ்! பளீஸ்! பளீஸ்............

ரணகளம்.

"ஏறு பெஞ்சு மேலே!"

இன்னும் எத்தனை பாடங்கள்! அத்தனை 'ஸார்'களும் தங்கள் கை வண்ணத்தைக் காட்டி விட்டே சென்றார்கள். மறுபடியும் அந்த 'ஸார்' வருகிறாரே பூகோளத்திற்கு.

மணியடிச்சாச்சு; அவரும் வந்தாச்சு.

கண்ணாடியைப் போட்டாச்சு. தலைப்பாகையும் கழற்றி வைத்தாச்சு. அய்யோ அந்த பிரம்பு!

"கிருஷ்ணா இந்தியாவின் வடக்கெல்லை?"

"இமயமலை ஸார்."

"நீதாண்டா பிச்சா, எழுந்திரு, தெற்கே?

"வங்காளக் குடாக் கடல் ஸார்."

"என்ன?"

"இல்லை ஸார்...........அராபிக்கடல் ஸார்...........ஸார், ஸார், இந்து மகா சமுத்திரம் ஸார்."

"டேய் ராமசாமி, படித்திருக்கையா? இந்தியாவின் தலை நகரம்?

மெதுவாக டெல்லி என்று முணங்குகிறான்.

"என்ன?"

"இல்லை ஸார், இல்லை ஸார்!"

"எண்டா முழிக்கிறே, படிச்சாத்தானே. வா இப்படி 'மாப்' (Map) கிட்டே. எங்கே காமி பார்ப்போம்?"

இந்தியா படத்தின் மேல் ஒரு சிறு விரல் ஊறுகிறது; கண் பிரம்பின் மேல்.

"எங்கே காமி! படிச்சாத்தானே!"

பளீஸ் என்று பிரம்பு இறங்குகிறது. தறிகெட்டு வேட்டையாடும் பிரம்பு; தடுக்க முயலும் சிறு கைகள். "அய்யோ அம்மா, அப்பா ஹோ உம் ங்......ங்.......அம்மாடி!.........

"அம்மாடி! போ கழுதை, வெளியே இருந்து படித்து ஒப்பித்து விட்டுத்தான் வீட்டுக்குப் போக வேண்டும். என்னிடமா."

வெளியே நெட்டித் தள்ளுகிறார். புத்தகத்துடன் போய் விழுகிறான். அப்படியே......................

ராமு பெரிய மனிதனாக நாற்காலியிலே! கையில் உலக்கை போல் தடிக் கம்பு. அது அவனால் தான் தூக்க முடியும். தலையில் தலைப்பாகை, கண்ணாடி...........என்ன சந்தோஷம்.

'பூகோள ஸார் புஸ்தகம் ஸ்லேட்டுடன் சின்னப் பையன் மாதிரி மெதுவாக வருகிறார்...........

"நாயே என் லேட்'. இங்கே வா, இப்படி"

போடு தடியாலே! "ராஸ்கல் உனக்கு என்னமா இருக்கு. நீ பிரம்பு, நான் கம்பு. என்னாலே தான் தூக்க முடியும்"......பூகோள ஸார் அழரார்! 'போய் தலை கீழே நின்று படித்து ஒப்பித்து விட்டு வீட்டிற்குப் போ" ராமுக்கு என்ன சிரிப்பு!..........

.........பெரிய 'கிளாஸ்'. நல்ல வாத்தியாயர் பெரிய நாற்காலியில். நரைத்த தலை; சிரித்த முகம் ராமு அவர் மடியில் உட்கார்ந்திருக்கிறான். அவர் முதுகைத் தடவிக்கொண்டே "இன்றைக்கு என் லேட்; இப்படி வரலாமோ? கெட்ட வழக்கம். இந்தா லட்டு. இந்தியாவின் தலை நகர்," "டில்லி," "அதுதான், என் பயப்படறே. நீ நல்ல பையனாச்சே. அந்தப் பூகோள ஸார் அந்தக் குழியிலே உதைபட்டுக்கொண்டு கிடக்கிறார் பார். பயப்படாதே. நான் இருக்கிறேனே"

....

'பளீல்!'

படிக்கச் சொன்னா நாயே தூங்கறயா? எழுந்திரு."

'பளீல்!'

"அய்யோ இல்லை ஸார்! டில்லிமா நகர் ஸார்! அய்யோ! ஹாம்ங்...... ஹாங்................"

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல் முதலிய கதைகள்

(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)

சுதந்திரச் சங்கு காரியாலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

விஷமக் குரங்குகள்

(திப்பு எழுதியது)

வால்தானில்லை. குரங்குச் சேஷ்டைக்கோ குறைவேயில்லை. இப்படி நமது தெருவில் அநேக பையன்களைக் காண்கின்றோம். இந்தப் பிள்ளைகளின் உடம்பு பரபரவென்று வளர்வதற்குக் காரணம் நமக்குத் தெரிகிறது. பெற்றோர்கள் அவர்கள் வயிற்றுக்கு வஞ்சனை செய்யாததே காரணம். பிள்ளைகளுக்குப் பேச்சு எப்படி நாளுக்குநாள் வளர்கின்றதென்பதையும் நாம் அறிவோம். ஆனால் இந்த 'விஷமம்' என்ற குணம் எப்படி வளர்கின்றதோ அதற்குத்தான் காரணம் கண்டு பிடிக்கவே முடிகிறதில்லை. நரியின் யுக்தியும், குரங்கின் சேஷ்டையும் இந்த மனித ஜந்துக்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்? ஒருவேளை இது கடவுளின் அருளோ என்னவோ, யார் கண்டது? ஆனால் சில பையன்களின் விஷமமோ நம்மால் தாங்க முடிகிறதில்லை.

தடித்தனமாகச் சரீரப் பிரயாசையினால் செய்யப்படும் விஷமிகளை இலகுவில் பழக்கிவிடலாம். 'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா' எனக் கண்டோர் ஐயுறும் வண்ணம் உட்கார்ந்துகொண்டு, ஆனால் விஷமத் திருகாணியைத் திருப்பிக்கொண்டே யிருக்கும் நமுட்டு விஷமப் பையன்கள் இருக்கின்றார்களே அவர்களைத்தான் நம்மால் சமாளிக்க முடிகிறதில்லை. விஷம யந்திரத்தை ஓட்ட அறிவை உபயோகப்படுத்துகின்ற பையன்களை எப்படிச் சமாளிப்பது?

ஒரு தினுஸு விஷமத்தை எடுத்துக் கொள்வோம். விழுப்புரத்துக்கு அருகே ஒரு சாலை இரண்டு பிரிவாகப் பிரிந்து செல்கிறது. ஒன்று கூடலூருக்குப் போகும் ரோடு. இன்னொன்று திருவண்ணாமலைக்குப் போகும் பாதை, அந்த சங்கமத்தில் ஓர் கைகாட்டி மரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. 'திருவண்ணாமலைக்கு வழி', 'கூடலூருக்கு வழி', 'விழுப்புரத்துக்கு வழி' என்று அந்தக் கைகாட்டி மரம் காட்டுகின்றது. அந்த ஊரிலுள்ள ஒரு இரட்டைவால் பையன் அந்த மரத்தின் கைகளைக் கழற்றி திருவண்ணாமலை ரோட்டை விழுப்புரம் ரோடாகவும், விழுப்புரம் ரோடைத் திருவண்ணாமலை ரோடாகவும், இப்படிக் கோலாகலமாக மாற்றி வைத்து விடுகின்றான். பழக்கமில்லாத பிரயாணிகள் அந்த ரோட்டுக்கு வந்து தடுமாறிப் போகிறார்கள். இதில் அந்த இரட்டைவால் பையனுக்குச் சந்தோஷம். இந்த விஷமப் புத்தி எப்படி வந்தது என்று யார் சொல்வது?

திருச்சினாப் பள்ளியில் ஒரு பல் வைத்தியர் தம் வீட்டு வாசலில்

> இவ்விடம்
> பல் கட்டப்படும்

என்று ஒரு போர்டு எழுதி வைத்திருந்தார். அந்த ஊர் விஷமக் குஞ்சு ஒன்று அந்த போர்டில் உள்ள 'க'வுக்குக் கீழே சுண்ணாம்பினால் ஒரு கோடு இழுத்துவிட்டுப் போய் விட்டான். போர்டைப் பார்த்தவர்கள்

> இவ்விடம்
> பல் தட்டப்படும்.

என்று படித்துவிட்டுச் சிரித்துக் கொண்டே போகிறார்கள். வெகுநாள் வரை, பாவம், அந்த வைத்தியர் இந்த விஷமத்தைக் கவனிக்கவே யில்லை. இந்த விஷமக் குஞ்சுகளைப் போல எத்தனையோ பயல்கள் நம் ஊரில் இருக்கிறார்களல்லவா?

சமீபத்தில் இரயில்வேப் பிரயாணம் செய்தபோது இதே மாதிரி போர்டில் செய்யப்பட்டுள்ள ஒரு விஷம வேலையை நான் கவனிக்க நேர்ந்தது. போர்டு பின்வருமாறு:—

> எச்சரிக்கை
>
> காலரா கண்டதும்
> கார்டுக்காவது
> ஸ்டேஷன் மாஸ்டருக்காவது
> உடனே தெரியப்படுத்தவும்.

இதுதான் போர்டு. இதில் ஒவ்வொரு வரியிலும் சில அட்சரங்களை ஒசைப்படாமல் ஓர் தறுதலைப் பையன் நீக்கியிருந்தான். அவன் விஷமத்துக்குப் பிறகு அதே போர்டைப் படிக்க அது பின்வருமாறு இருக்கிறது:—

> எச்சரிக்கை
>
> காலரா கண்டது
> கார்டுக்கா
> ஸ்டேஷன் மாஸ்டருக்கா
> உடனே தெரியப்படுத்தவும்.

இந்த விஷம வேலையைக் கண்டு கார்டுகளும், ஸ்டேஷன் மாஸ்டர்களும் சீறுகிறார்கள். சீறியென்ன பயன்? குற்ற யுக்தியுடைய குழந்தைகளிருக்கும் வரை இப்படித்தான் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது.

சில எலெக்டரிக் ஸ்டேஷன்களுக்கு அருகே,

"மரண அபாய அறிவிப்பு" என்ற எச்சரிக்கைகளை முதலாளிகள் தொங்க விட்டிருக்கிறார்கள்.

யாரோ அந்தஊர்ப் பயல்கள்.

"மரண உபாய அறிவிப்பு" என்று வெகு எளிதில் மாற்றிவிட்டுப் போய் விடுகிறார்கள். இந்த மாதிரி, அபாயத்தை உபாயமாக்கும் இந்தப் பையன்களுக்கு எவ்வளவு விஷம புத்தி யிருக்கிறதென்று கணக்கிட முடியுமா?

விஷமஞ் செய்யும் பிள்ளைகளிடம் அத்தியந்த ப்ரீதிகாட்டும் பெரியோர்களும் சிலருண்டு. ஒரு தடவைக் கும்பகோணம் குப்புஸ்வாமி தீக்ஷிதர் மகா விஷமியான ஓர் பையன் ஏதோ ஓர் விஷம காரியத்தைச் செய்து கொண்டிருப்பது கண்டு அவனுக்கு ஒரு ரூபாயைப் 'பரிசாக'த் தந்து விட்டாராம். இந்த சமாசாரம் எப்படியோ இதர பையன்களுக்குத் தெரிந்து அவர்களும்

ஆங்காங்கு செய்துவிட்டு யாராவது ஒரு ரூபாய் தரமாட்டார்களா என்று எதிர் பார்த்திருந்தார்களாம். கண்ணுற் கண்டபடி செய்யும் குரங்கு வர்க்கத்துக்கும், இந்தப் பையன்களின் விஷம கோஷ்டிக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லவே யில்லை.

ஆனால் பையன்களுக்கு சிறு வயதில் விஷமமில்லாது போனால் அந்தப் பையன்கள் வெறும் சோற்றுத் தடியர்களாகவே போய்விடுகின்றனர். விஷமமாயுள்ள பையன்கள் பிற்காலத்தில் சூடிகையாக வாழ்க்கையில் இருப்பதாக அநுபோகஸ்தர் சொல்கின்றனர். எப்படியாயினும் விஷமத்துக்கோ, விளையாட்டுக்கோ, பையன்களுக்கு இடங்கொடுத்தே யாகவேண்டி யிருக்கிறது. விஷமமோ அதிகமாகிறது. நாம் கற்றுக் கொடுக்காமலே பையன்களிடம் வரும் இந்த விஷம வேலைகள் சொந்த அறிவு வளர்ச்சி என்றுதான் நினைக்க வேண்டி யிருக்கிறது.

இந்த விஷமத்தில் முனைந்திருக்கும் பையன்களைத் தண்டிக்கவும் வேண்டாம்; போற்றவும் வேண்டாம். பையன்களின் குணாதிசயங்கள் சரிவர வளர்ந்துவிடும். மகா விஷமக்காரப் பையனாக ஊர் சுற்றிக் கொண்டிருந்த ஓர் ஆங்கிலப் பையன்தான் 'கிளைவ்' என்ற பெயரோடு ஏகாதிபத்திய சரித்திரத்தில் இருந்து வருகின்றான். இப்படி விஷமஞ் செய்யும் பையன்களை நல்ல வழியில் திருப்பி விட்டோமானால், இதே பையன்கள் தேசத்துக்கும் இதர பொதுக் காரியங்களுக்கும் உபயோகப் படுவார்களென்பதில் ஐயமுண்டா?

நந்தனர் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு காரியாலயம்

திருவல்லிக்கேணி, சென்னை.

பல்கேரியாப் புரட்சி

கத்தியில்லை, ரத்தமில்லை, குண்டில்லை, விஷப் புகைகள் இல்லை. பல்கேரியாவில் திடீரென்று ஒரே நாளில் ஒரு பெரிய அரசியல் புரட்சி நடந்துவிட்டது. சென்ற மாதத்தில்தான் ரத்தமற்ற புரட்சி ஒன்று ஆஸ்திரியாவில் நடந்தது. ஆனால் அங்குகூடப் பார்லிமெண்டின் சம்மதத்தின் பேரில்தான் டோல்பஸ்ஸின் சர்வாதிகாரம் நிலைநாட்டப் பட்டது. இங்கோ இத்தகைய சடங்கு யாதொன்றும் கிடையாது. திடீரென்று ஒருநாள் காலை பழைய அரசாங்கம் மாறிப் புதிய தேசீய அரசாங்கம் ஏற்பட்டுவிட்டதென ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

எண்பது பெரிய சேனாபதிகள் ராஜாவிடம் கட்சி பேதமில்லாத கவர்ண்மெண்டு ஏற்படுத்த வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனர். ராஜாவுக்கு ஒன்றுமே தெரியாது. என் செய்வது? அரண்மனையைச் சுற்றிலும் சேனாவீரர்கள் சூழ்ந்து கொண்டனர். ராஜாவும் விதியில்லையே என்று ஒப்புக்கொண்டாராம்.

எந்தத் தெருவிலும், எங்கு பார்த்தாலும் போர் வீரர்களும், போலீஸ் வீரர்களும் போக்கு வரவைத் தடுத்து நின்றனர். எம். முஷன் ஹாப் என்னும் பிரதம மந்திரியை அதிகாலையில் பயந்துபோன அவரது சேவகன் உலுக்கி எழுப்பி, அவரது வீட்டைப் படை வீரர்கள் சூழ்ந்திருப்பதாகத் தெரிவித்தான். உடனே பிரதம மந்திரி அவசர அவசரமாய் டெலிபோனில் போர் மந்திரியைக் கூப்பிட்டார். சொந்த சம்பாஷணைகளுக்கு அநுமதிக்கப் பட மாட்டாது என்று டெலிபோன் ஆபீஸ் பதில் அளித்தது. 'நான் யார் தெரியுமா? முதல் மந்திரி' என்று மந்திரி பதில் அளித்தார். "இல்லை. நீர் மந்திரி யல்ல" என்று பதில் கூறி டெலிபோன் ஆபீஸர் டெலிபோனை நிறுத்திவிட்டார். இவ்வாறே ஒவ்வொரு மந்திரியாக வேலையிலிருந்து விலக்கப்பட்டனர்.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட மந்திரிகளும் திடுக்கென ஆச்சரியமுற்றனர். போலீஸ் ஏன், எதற்கு என்று ஒன்றும் சொல்லாமல் அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். சிலர் தாங்கள் கைது செய்யப்பட்டதாகப் பயந்தனர் ஆனால் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தவுடன் போலீஸ் தலைவர் அவர்கள்தாம் புது அரசாங்க மந்திரிகள் என்று விளக்கிக் கூறினர்.

ராணுவ ஆட்சி அதிகாலை 2 மணிக்கே ஆரம்பித்துவிட்டது. பொது ஸ்தலங்கள் எல்லாம் ராணுவத்தால் நிரம்பியது. துப்பாக்கிப் படையும், பீரங்கிகளும் முக்கியமான இடங்களில் தயாராய் வைக்கப்பட்டன. தினசரித் தொழிலுக்குப் போய்க்கொண்டிருந்த ஜனங்கள் அன்று வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று வீடுகளுக்குத் திருப்பி யனுப்பப்பட்டனர்.

தெருக்களில் ஈட்டியுடைய போர் வீரர்களைத் தவிர, வேறு காக்கைக் குஞ்சுகூடக் கிடையாது. நூற்றுக் கணக்கான பொதுவுடைமைத் தலைவர்களும், தீவிர வாதிகளும் சிறை செய்யப்பட்டனர்.

இந்தப் புரட்சிச் செய்தி கம்பியில்லாத் தந்தி மூலம் தேச முழுவதும் பரப்பப்பட்டது. ரேடியோ மூலம் தேசீயப் பாடல்கள் தேச முழுவதற்கும் பரப்பப்பட்டன.

இப்பொது அரசாங்கத்தின் முதல் காரியம் தங்களது அரசியல் முறையை விளக்கி அறிக்கை விட்டதே யாகும். இதுவரையில் கட்சிப் பிரதி கட்சிச் சண்டையும், உள்நாட்டுக் கலகங்களும், சொந்தச் சண்டைகளும், கணக்கற்ற கட்சிகளும், கட்சிக்குட் கட்சிகளும் தேசத்தைப் பாழாக்கி விட்டனவாம்.

இப்புது அரசியல் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டது. அதற்குப் பதில் 100 பிரதிநிதிகள் அடங்கிய ஒரு புதுச் சபை ஏற்படுமாம். அதில் 75 பேர்கள் கவர்மெண்டாரால் நியமிக்கப்படுவார்களாம்.

பல்கேரியாவில் அரசியல் மாறுதலைப் பற்றிச் சர்வாதிகார தேசங்களெல்லாம் மகிழ்ச்சி யடைகின்றனவாம்.

தளபதியின் வாக்கு

(மகாத்மாவின் பிரசங்கம்)

[தன்னைத் தவிர, மற்றவரெல்லாம் சட்ட மறுப்பை நிறுத்திவிட வேண்டும் என்று மகாத்மா ஏற்கனவே ஒரு அறிக்கை செய்தது நண்பர்களுக்குத் தெரியும். பாட்னாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முக்கியத் தீர்மானங்களில் ஒன்று, காந்திஜீயின் இந்த அறிக்கையை அப்படியே அங்கீகரித்து விட்டது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்தவர்களுக்கு மகாத்மாஜீ சொல்லிய பதில் தீரமானது; உருக்கமானது. கள்ளங் கபடமற்ற சத்தியசீலனது வாக்கு. அதன் சாரமான சில பகுதிகள் கீழே தரப்பட்டிருக்கின்றன.]

என்ன வித்யாசம்?

நானும் சட்டமறுப்பு எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். தனி முறையில் என்னிஷ்டப்படி காரியம் செய்ய எனக்கு உரிமையில்லையா? அதைப் பறிமுதல் செய்துவிட வேண்டுமென்றே அவர்கள் அவ்வாறு சொல்லுவதற்கு அர்த்தம். நான் காங்கிரஸுக்குப் பிரதிநிதியாகச் சட்ட மறுப்புச் செய்யக் கூடாதென்று நீங்கள் சொன்னால், நியாயமாயிருக்கும்; சந்தேகமில்லை. பூனாவில் செய்த முடிவில் ஒரு மாறுதல் செய்யவேண்டுமென்பதே இப்பொழுது சொல்லும் யோசனை. தனி மனிதன் சட்டமறுப்புச் செய்ய வேண்டுமென்பது பூனா முடிவு. ஆனால், எத்தனை பேர் வேண்டுமானாலும் சட்ட மறுப்புச் செய்யலாம் என்று அப்போது முடிவு செய்தோம். ஒரே ஒரு மனிதர்தான் செய்யலாம் என்று இப்பொழுது எல்லை போடுகிறோம்.

வாழ்வை இழக்கவும் தயார்

நீங்கள் இதை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்கிறேன். இவ்வாறு நான் கேட்பதே, காங்கிரஸின் பெயராலும் அதன் அதிகாரத்தைப் பெற்றுமே செயல் புரிய நான் ஆசைப்படுகிறேன் என்பதற்குச் சாட்சியமாகும். அந்த அதிகாரத்தை எனக்குத் தர உங்களுக்கு இஷ்டமில்லாதிருக்கலாம். அப்படியானால்கூட, தனி முறையில் எனக்குள்ள உரிமையை நீங்கள் பறிமுதல் செய்யலாகாது. அவ்வாறு செய்வீர்களாயின், என் உயிர் வாழ்வையே அழித்துவிட விரும்புகிறீர்கள் என்றுதான் அதற்கு அர்த்தம். அதனால் இந்தியா தனது லட்சியத்தை நோக்கி முன்னேற்றமடையக் கூடுமானால், அவ்வாறு என் உயிர் வாழ்வையே துறக்கவும் நான் தயங்கமாட்டேன். ஆனால் ஒரே ஒரு மனிதனுடைய செயல் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து விடுவதால், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடைத்துவிடாது என்பதே எனது திட நம்பிக்கை.

இதோ உள்ள தளபதி

மனஞ் சோர்ந்துபோய் நான் இந்த முடிவுக்கு வரவில்லை. நான் எப்பொழுதும் நம்பிக்கை நிறைந்தவன்; மனச்சோர்வென்பதே தெரியாதவன். அஹிம்சா தர்மச் சட்டமறுப்பில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கிறது. எனது இந்த முடிவு அந்த நம்பிக்கையிலிருந்தே பிறந்தது. எந்தக் காலத்தில், எந்த விதமாகக் காரியம் செய்வது என்பதை நிர்ணயிக்க வேண்டியவன் தளபதிதான். தளபதி ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தனது வீரர்கள் செயல் செய்ய உள்ள சக்தியைக் கணித்து நிச்சயம் செய்து கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். சேவை புரிவதற்கு வேண்டிய நிபந்தனைகளை விதிக்கக் கூடியவனும் தளபதிதான், சேனையிலுள்ள வீரர்கள் அல்ல. இதோ உள்ள உங்கள் தளபதிக்கு ஆயுத பலம் கிடையாது; தனது வீரர்களுடைய அறிவுக்கும் உள்ளத்துக்கும் வேண்டுகோள் ஒன்றுதான் செய்யக்கூடியவன்.

யார் யாரை நீக்கலாம்?

நான் மாத்திரம் சட்ட மறுப்புச் செய்தாலென்ன? அது உங்களில் எவர்மீதும் பழி சுமத்துவதல்ல. எத்தனை குறைகளுக்கிடையே நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இத்தனை வருஷங்களாக நான் அறியாமற் போனேன். இந்த ஆயுதம் அவமதிப்புக்கு உள்ளாகாதிருக்க வேண்டுமானால் 'நில்லுங்கள்' என்று கட்டளையிட வேண்டிய தருணம் வந்துவிட்டது. உங்கள் தளபதியின் யோசனையை நீங்கள் ஏற்றாலும் ஏற்கலாம், தள்ளினாலும் தள்ளலாம். அஹிம்ஸா தர்மப் போராட்டத்தில் தனது வீரர்களைத் தளபதி நீக்க முடியாது; வீரர்கள்தான் தளபதியை நீக்கிவிட முடியும்.

ஒன்றிரு வருஷத்தில்

இது பயமுறுத்தலல்ல. நீங்கள் எப்படிச் செய்தாலும், நான் காங்கிரஸை விட்டு விலகேன்; அதில் ஒரு அங்கத்தினனாகவே இருந்து வருவேன். அதன் பிரதிநிதி என்று வேண்டுமானால், சொல்லிக்கொள்ள மாட்டேன். ஒன்றிரு வருஷங்கள்தான் கழியட்டுமே. அதன் பிறகு என்னிடம் உங்களுக்குத் திரும்பவும் நம்பிக்கை யுண்டாகத்தான் போகிறது. நீங்கள் என் கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி செய்ய என்னிடம் ஒன்றும் அதிகார பலம் கிடையாது. வற்புறுத்தி வேண்டுகோள் செய்யக்கூடிய சக்தி ஒன்றுதான் என்னிடம் உண்டு. இத்தகைய தளபதியை அவன் வகுத்துக் கொண்ட நெறியிலிருந்து பிறழும்படி கேட்கலாமா? அப்படிக் கேட்பது, அவன் பகுத்தறிவுக்கே விரோதமாய் நடக்கும்படி பலவந்தம் செய்வதற்கே சமமாகும்.

ஒளியாது பேசுங்கள்

உங்கள் தளபதியின் கட்டளைகள் உங்களுக்குப் பிடிக்காவிட்டால், அவனை விலக்கி விடுங்கள். நான்

கோபத்தால் இதைச் சொல்லவில்லை. நான் கோபிப்பதாயிருந்தால், நான் சட்ட மறுப்புச் செய்வதே நியாயமாயிராது. சின்னஞ் சிறு குழந்தைகள் கூட என்னிடம் பயத்தை விட்டுவிட்டன; தங்கள் இஷ்டப்படி என்னை மாற்றவும் மாற்றியிருக்கின்றன. என்னைத் தொல்லைத் செய்யும் ஈக்களுக்குக் கூட நான் தீங்கு செய்ததில்லை. இப்பேர்ப்பட்ட மனிதனை, பதவியை விட்டு விலகும்படி உத்திரவு போட நீங்கள் ஏன் அஞ்சவேண்டும்? அதனால் நான் வருந்த மாட்டேன். நீங்கள் ஒளியாது பேசுவதற்காக, வந்தனமே செலுத்துவேன். ஆனால், உங்கள் தளபதியை விலக்காது வைத்துக் கொள்ள முடிவு செய்வீர்களானால், அவன் வகுக்கும் கட்டுத் திட்டங்களில் ஐயங்கொள்ளக் கூடாது; அவற்றைப் பின்பற்ற வேண்டும். அவன் கட்டளைகட்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

கடவுளே அறிவார்

1922-ம் வருஷத்தில் நான் பர்டோலி முடிவைச் செய்தபொழுது, காலஞ்சென்ற ஹக்கீம் ஸாஹிபும் டாக்டர் அன்ஸாரியும் அதை அங்கீகரிக்க வெகு கஷ்டப்பட்டார்கள். ஆனால், அந்த முடிவுதான் தேசத்தை அகீர்த்திகரமான தோல்வியினின்றும் நாசத்தினின்றும் காப்பாற்றிற்று. சாந்தமான ஒரு போராட்டத்தில் பலாத்காரத்துக்கு இடம் கிடையாது என்பதை மகா ஜனங்களுக்கு அந்த முடிவு உணர்த்திவிட்டது. சமீபத்தில் நடந்த போராட்டத்தில், ஜனங்கள் செயலளவில் பலாத்காரத்திலிறங்கவில்லை. எண்ணத்தில் எவ்வளவு தூரம் பலாத்காரமில்லாது பரிசுத்தமாயிருந்தார்களோ, அதைக் கடவுளே அறிவார். செயலிற் போலவே, சிந்தையிலும் பலாத்கார மற்றுப் பரிசுத்தமாயில்லையென்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். நமது அஹிம்சா தர்மமெல்லாம் பெரும்பாலும் செயல் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் அனுஷ்டிக்கப் பட்டது.

ராஜ தந்திரச் செயல்

1922-ம் வருஷத்தில் பர்டோலி முடிவைச் செய்தேன். அதைப்பற்றி நான் பின்னால் வருந்தவேயில்லை. புத்தி சாலித்தனம் வாய்ந்த ராஜ தந்திரச் செயல் என்றே அதை நான் கருதுகிறேன். இப்பொழுது நான் சொல்லும் யோசனையும் அப்படிப்பட்டதேயென்று நான் மதிக்கிறேன். எனது ஹிருதயம் மிதமிஞ்சி இளகியது என்று நினைக்கிறார்கள். எனது ஹிருதயம் எஃகைப் போல் கடினமானதென்பதை நான் அறிவேன்.

மறுபடியும் போராவேதால்

நான் செய்த அறிக்கையில் இல்லாத அர்த்தத்தைச் செய்வீர்களானால், அதற்கு நான் என்ன செய்யமாட்டும்? எனது அறிக்கையில் பிரஸ்தாபித்த மனிதர் என் மகனைப் போல் எனக்கு அருமையானவர். அவர்மீது நான் குற்றம் சாட்டவில்லை. என்மேல்தான் குற்றம் சுமத்திக் கொள்ளவேண்டும். அவர் இப்போது என்னோடு பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார். அவர் மீதே நான் குற்றம் சுமத்தாதபோது மற்றவர் மேல் நான் எப்படிக் குற்றம் சாட்டுவேன்? என்றாலும், நாம் அஜாக்கிரதையானதோர் பிழைக்கு ஆட்பட்டிருப்பதைக் கண்டேன். அது நமது இயக்கத்துக்கே தீங்கு பயக்கக் கூடிய அளவுக்குப் போய்விட்டது. இதைக் கண்டும் நான் சும்மாவிருந்தால், நம்பிக்கைத் துரோகியாகி விடுவேன். நில்லுங்கள் என்று கூவி, இயக்கத்திற் கலந்தவருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியவனானேன். போராட்டத்தில் ஜனங்கள் மறுபடியும் கலக்க வேண்டுமானால், சிந்தை, சொல், செயல் இம்மூன்றிலும் அஹிம்சா தர்மம் வேண்டும். இந்த தர்மத்தை இன்னும் அதிகக் கண்டிப்புடன் அனுஷ்டிக்க வேண்டும். அதன் அவசியத்தை இன்னும் நன்றாய் ஜனங்கள் உணர்ந்து கொள்ளவும் வேண்டும். இவை தான் எனது எச்சரிக்கை.

முத்திரை உதடுகள்

என் உதடுகளைத் தைத்து முத்திரை வைக்கப்பட்டிருக்கிறது. அப்துல் காபர்கான் சிறையிலிருக்கிறார். அதைப் பற்றி என் மனம் வேதனைப்படவில்லையா? தளபதியாகிய நான் அந்தச் சகோதரர்கள் எக்கதி போனாலென்ன என்று கைவிட்டு விடுவதா? அவர்கள் சிறைப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துக்கொண்டு, வேதாந்தமாய் உபேட்சை செய்துவிடலாமா? பண்டித ஜவஹர் சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார். சர்தார் வல்லபாயும் அப்படியே. "நான் காந்தியின் கண்மூடிச் சீடன்; அவர் சொல்லுவதற்கெல்லாம் 'ஆமாம்' போடுபவன்" என்று அவர் வேடிக்கையாகச் சொல்லுவார். அவருக்குப் புத்திசாலித்தனம் இல்லையென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர் என்னைவிடப் பெரிய பாரிஸ்டர்; கீர்த்தி வாங்கிய ஒரு கிரிமினல் தரப்பு வக்கீல். நான் சொல்லுவது சரியென்று நிச்சயம் ஏற்பட்டதால்தான், அவர் எனக்கு 'ஆமாம்' போட்டார். இந்த மனிதர்களைச் சிறைக்குள்ளேயே கிடக்க விட்டு, நான் சுகபோக வாழ்க்கைக்குத் திரும்பலாமா? நீங்கள் திரும்பத்தான் இடங் கொடுக்கலாமா?

'என்னைத் தடுக்க வழி'

அவர்கள் எந்தக் காரியத்துக்காகச் சிறை சென்றிருக்கிறார்களோ, அந்தக் காரியத்துக்காகவே நீங்கள் வெளியிலிருக்கவேண்டும். சுகபோக வாழ்க்கை நடத்துவதற்காக அல்ல நீங்கள் வெளியில் இருப்பது. எதிர்காலத்திய எந்தப் போராட்டத்திலும் தானாய்த் தரித்திரத்தைத் தேடியணைந்து கொள்ளுவதற்காகவே நீங்கள் வெளியிலிருங்கள். இதுதான் என் விருப்பம். உங்களை நம்பியிருக்கும் சுற்றத்தாருக்காக, உங்கள் எவருக்கும் படிப்பணம் கிடைக்காது. சிறைக்கு வெளியே வேலைக்குக் குறைவில்லை. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக உங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்யலாம். கதரை மறந்து, கிராமங்களுக்குக் கதிமோட்சம் பிறக்குமென நீங்கள் நம்பத்தான் முடியுமோ? தீண்டாமை விலக்கு வேலையும் இருக்கிறது. வெளியிலிருக்கும் உங்களுக்கு மனச் சாந்தியோ ஓய்வோ கிடையாது. 1920-ம் வருஷத்துக்குப் பிறகு காங்கிரஸ் திட்டத்தில் சேர்க்கப்படாத ஒரே ஒரு இனத்தைக்கூட நான் உங்களிடம் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தைப் பூர்த்தியாய் நிறைவேற்றுங்கள். நிறைவேற்றினால், அப்பொழுது—அப்பொழுது மாத்திரந்தான்—என்னைச் சிறை செல்லாது தடுக்க உங்களுக்கு உரிமை உண்டு.

கதரையே
அணியுங்கள்

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

18712

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு			ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு	"	"	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு	"	"	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	"	"	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

PARVATHI PARINAYAM

பார்வதி பரிணயம்

இந்நாடகத்தை
"ஷைனிங் ஸ்டார்ஸ் ஸோஸைடியாரால்"
இனிய பாட்டுகளுடன்
"ஹிஸ்மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
ரிகார்டுகளில்
எடுத்திருப்பதைக் கேளுங்கள்

இதன் விவர புஸ்தகம் எங்கள் அதிகாரம் பெற்ற எல்லா வியாபாரிகளிடமிருந்தும் இலவசமாக கிடைக்கும். கிடைக்காவிட்டால் எங்களுக்கு எழுதினுல் இலவசமாக அனுப்பி வைப்போம்.



"His Master's Voice"

தி கிராமபோன் கம்பனி லிமிடெட்,
45, ஸௌத் பேரேட், பெங்களூர்.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.